# சிங்கள மொழியிலும் மேயர் வரவேற்பிதழை வாசித்து அளித்தார்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 11

இதழ்: 333

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 28 ஜுல்கஃ 3 திங்கட்கிழமை [12-1-70

பொங்கல் திருநாளை

பொலிவுடன் கொண்டாட

விசேஷமாக வரவழைக்கப்பெற்ற

சிறிதும் கலப்பற்ற

சுத்தமான

சர்க்கரை

மொத்தமாகவும் - சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. வைத்திலிங்கம் & கோ

45, கே.கே.எஸ்.ரோட் — யாழ்ப்பாணம்.

போன்: 663

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் பாரத ஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் சிங்களத்திலும் வரவேற்புபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

யாழ். நகரமண்டபத்தில் நடந்த இந்த வைபவத்தில் யாழ். நகரமேயர் திரு. எஸ் நாகராஜா தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வரவேற்பிதழை வாசித்து வெள்ளிப்பேழையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தார்.

முதலில் தமிழிலும், அடுத்து சிங்களத்திலும் பின்னர் ஆங்கிலத்திலும் மேயரே இந்த வரவேற்புபசாரத்தை வாசித்துக் கையளித்தார்.

யாழ். மாநகரசபை அளித்த பொது வரவேற்புவைபவத்தில் இப்படி சிங்களத்தில் வரவேற்புபசாரப்பத்திரம் மேயர் ஒருவரால் வாசித்தளிக்கப்பட்டது இதுவே முதல்தடவையெனக் கூறப்படுகிறது.

## பலாலி விமான நிலையத்தில் கிரிக்கு அன்பான வரவேற்பு

பாரத ஜனாதிபதி திரு. வி. வி. கிரிக்கு பலாலி விமான நிலையத்தின் புதிய மண்டபத்தில் நேற்று அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. கிரி விசேஷ விமானத்திலிருந்து இறங்கியதும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீற்றசின மகள், செல்வி கரோல்பிரிஸ் திருமதி கிரிக்கு மாலை சூட்டினர். வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கத்தின் மகன் எஸ். இராதாகிருஷ்ணன் ஜனாதிபதிக்கு மாலை சூட்டினர். இதைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் [illegible] திரு. பீற்றஸ், கங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் மற்றும் வடபகுதி எம். பி.க்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் உயர்தர அதிகாரிகள் வரவேற்றார்கள்.

சுமார் 80,000 ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்ட மண்டபத்திற்கு ஜனாதிபதி அழைத்துச்செல்லப்பட்டார். ஜனாதிபதியுடன் திருமதி கிரி, மற்றும் உயர்தர அதிகாரிகளும் பத்திரிகை பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

### நாதஸ்வர இசை

மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. இராஜதுரை, வலிவடக்கு கா[illegible]யாதிகாரி திரு. பி. பி எல். பற்றிர் உதவி அரசாங்க அதிபக் திரு. முருகேசம்பிள்ளை ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றார்கள். கொழும்பு பொலிஸ் பகுதியை சேர்ந்த ''பாண்ட்' வாத்தியம் இசைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விழா மண்டபத்தில் நாதஸ்வர இசை முழங்கப்பட்டது.

பொதுமக்களும், மாணவர்களும், விமான நிலைய வரவேற்பு மண்டபத்திலும் வெளியிலும் திரண்டிருந்தனர். விமானநிலைய மண்டபம், இலங்கை இந்திய தேசிய கொடிகளாலும் மாவிலை தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

# வடபகுதி துறைமுகங்கள் சரித்திரப் புகழ் வாய்ந்தவை

## யாழ். நகர வரவேற்பில் இந்திய ஜனாதிபதி கிரி

—நமது அலுவலக நிருபர் கா. யோகநாதன்—

யாழ்ப்பாணம், திங்கள்

''வடபகுதியின் சரித்திரப் புகழ் பெற்ற துறைமுகங்களிலிருந்து கப்பல்கள், இந்தியாவுக்கும் மற்றும் உலகின் பல நாடுகளுக்கும், வர்த்தக நோக்கமாக பிரயாணம் செய்தன. இங்கு ஒரு துறைமுகம் திருத்தி அமைக்கப்படுகிறது என அறிந்தேன். யாழ்ப்பாணதுறைமுகங்கள் புதுமையானவை. இத்துறைமுகங்களையும், யாழ்ப்பாணத்தின் புதிய தொழில் துறைகளையும், இங்குள்ள மக்கள் பலரையும் சென்று ப[illegible]பதற்கு நான் விரும்புகின்றேன். [illegible]ல் இதற்கு போதிய நேரம் கிடைக்காதது துரதிர்ஷ்டமேயாகும். நேரம் கிடைக்காததால் இத்தீவின் பல பகுதிகளிலுமுள்ள அழகான இடங்களையும், பார்[illegible] இருக்கிறது.

யாழ்ப்பாணம் நகர மண் [illegible] தான் விருந்தாளிமேல் செலுத்தோடும் வரவேற்று உபசரி

டபத்தில் நேற்று காலை [illegible]ம் அன்புணர்ச்சியாகும். த்தார்கள் எனக் [illegible]றிய

நேற்று ஆட்சிமன்றத்தில்

## பிரதமர்-ஆர். ஜி. வாக்குவாதம்

கொழும்பு, ஞாயிறு

தம்பதெனியா எம். பி. தி[illegible]. ஆர். ஜி. சேனநாயகாவுக்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கு மிடையே இன்று ஆட்சிமன்றத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. இராணுவத்தினருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்றும் இதனால் அண்மைக்காலங்களில் இராணுவத்தினர் பொதுமக்களால் தாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஆர். ஜி. சேனநாயகா இன்று ஆட்சிமன்றத்தில் குற்றஞ்சாட்டினர்.

முன்னையவிட தற்போது இராணுவத்தினருக்கு உயர் [illegible] முனைவதாகவும், இது இராணுவத்தினரின் நன்மைக்காகப் பேசவில்லையென்றும்பிரதமர் ஒரு சமயத்தில் கூறினர். அப்போது இருவருக்குமிடையில் வாக்குவாதமேற்பட்டது.

திரு. ஆர். ஜி. சேனநாயகா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வடபகுதியில் கடமையாற்றும் இராணுவத்தினருக்கு அவர்களது சம்பளத்தில் சாப்பாட்டுச் செலவு கழிக்கப்படுகிறது. ஏனைய இடங்களில் இப்படிச் செய்யப்பவில்லை அரசாங்கம் இதுவிடயத்தில் பாரபட்சம்

## விழாக் கோலம் பூண்ட வீதி எங்கும் இந்திய தேசிய கொடிகள்

ஜனாதிபதி ஊர்வலமாகச் சென்ற வழியெங்கும் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம்பூண்டிருந்தது பாடசாலை மாணவர்கள் வீதியின் இருகரையிலும் இந்திய தேசிய கொடிகளை கையில் பிடித்தவண்ணம் அணிவகுத்துநின்றனர்,

பலாலி வீதி பழம் வீதிச் சந்தியில், யாழ். மேயர் திரு. சி. நாகராசாவும் உறுப்பினர்களும் ஜனாதிபதியை வரவேற்றார்கள். மேயர்நாகராசாவும், உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கமும் ஜனாதிபதிக்கு [illegible]டைந்தபோது வெடிகொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மேயர் திரு சி. நரகராசா ஜனாதிபதிக்கு மாலைசூட்டினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர் திருமதி கிரிக்கு பூச்செண்டு அளித்தார், அங்கிருந்து நாதஸ்வர பவனியுடன் நகரமண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார். மண்டப நுழைவாயிலில் அங்கத்தவர்களை மேயர் ஜனாதிபதிக்கு அறிமுகம்செய்துவைத்தார்.

நகரமண்டபம் கொடிகளாலும்மாவிலைத்தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்[illegible] திரண்டிருந்தனர்

### தேநீர் விருந்து

ஜனாதிபதியும், திருமதி கிரியும், மேயரும், உயர்தர அதிகாரிகளும், மாநகரசபை உறுப்பினர்களும் மேடையில் அமர்ந்தனர் இலங்கை இந்திய தேசிய கீதங்கள் பாடப்பட்டன

ஜனாதிபதிக்கு பொதுவரவேற்பு அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேயரினல் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் கலந்து கொண்டார். பின் அங்கிருந்து அரசாங்க விருந்தினர் விடுதியான கிங்ஸ்கவுஹீக்கு அழை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கவும் திரு. ஆர். ஜி. சேனநாயகா இன்று ஆட்சிமன்றத்தில் குற்றஞ்சாட்டினுர்.

முன்னையவிட தற்போது இராணுவத்தினருக்கு உயர்ந்த மதிப்பு இருப்பதாக இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் கூறினுர்.

இராணுவத்தினரின் மத்தியில் பிளவை ஏற்படுத்தி நாட்டில் பிளவைஏற்படுத்துவதற்காகவே திரு. ஆர். ஜி. தில் சாப்பாட்டுச் செலவு கழிக்கப்படுகிறது. ஏனைய இடங்களில் இப்படிச் செய்யப்ப வில்லை அரசாங்கம் இதுவிடயத்தில் பாரபட்சம் காட்டுவதன்காரணம் என்ன என்றும் அவர் கேட்டார்.

தேயிலைச்சபைச் சட்ட ஒத்திவைப்புப் பிரேரணை இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இலங்கை வரலாற்றில்

# ஒரு பெண்ணின் தலைமையில் ஆட்சிமன்ற நிகழ்ச்சிகள்

சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இடைவேளையின் பின்னர் மீரிகம எம், பி. திருமதி சிவா ஒபயசேகரா தலைமையில் நடைபெற்றது. இலங்கை வரலாற்றின் ஒரு பெண்மணி சபை நிகழ்ச்சிகளுக்குதலைமை வகித்தது இதுவே முதல்தடவையாகும்.

# 'தீண்டாமை ஒழிப்புமாதம்'; பொங்கல்முதல் அனுஷ்டிப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

''தமிழரின் தலைத் திருநாளான தைப்பொங்கல் தினத்தன்று தொடக்கம் ஒருமாத காலமாக யாழ்ப்பாணக் குடாநாடுமுழுவதும் ''தீண்டாமை ஒழிப்பு மாதம்'' அனுஷ்டிப்பதென அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொது நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் சில தீர்மானங்கள் வருமாறு:-

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கு நிதிசேர்த்தல், கல்விப்பகுதியினரின் அனுமதிபெற்று பாடசாலைகளில் தீண்டாமை ஒழிப்புக் கொடி விற்பனவு செய்தல், தீண்டாமை ஒழிப்பின் அவசியம் பற்றி சொற்பொழிவுகள் செய்தல்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்பின் அவசியம் பற்றி பிரசாரம் செய்தல்.

இவை உட்பட மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## காலி புதிய மேயர்

காலி, ஞாயிறு

காலி மாநகரசபையின் மேயராக சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச்சேர்ந்த டபிள்யூ. டி. விஜயகுணசூரியா ஒரு அதிகப்படியானவாக்கினுல் தெரிவுசெய்யப்பட்டார் சுயேட்சை அங்கத்தவர் ஒருவர் உதவிமேயராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்,

## விசாரணை ஒத்திவைப்பு

காலி, சனி

வீடு உடைத்த வழக்கு ஒன்றில் எதிரியான ஒருவர் பொலிஸ் நிலையத்தில் மரணமானது குறித்து மாஜிஸ்திரேட் விசாரணையை ஜனவரி 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இது சம்பந்தமாக காலி பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் எஸ்.வி. ஏ. சமரதாஸ, கான்ஸ்டபிள்கள் கருணதாஸ, கோபால கிருஷ்ணன் ஆகியவர்கள் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

## உரும்பராயில் மாணவர்கள்

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் பட்டினசபை தலைவர் திரு. க. பத்மராசா இன்று இந்தியஜனுதிபதியை பட்டினசபைக்கு முன்னுல் வைத்து வரவேற்ருர். உரும்பராய் இந்துக்கல்லூரி, உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை ஆகியவற்றின் மாணவ மாணவிகள் வீதியில் அணிவகுத்து நின்று வரவேற்றனர்,

நேரம் கிடைக்காததால் இத்தீவின் பல பகுதிகளிலுமுள்ள அழகான இடங்களையும், பார்வையிட இயலாமல் இருக்கிறது.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேற்று காலை அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் பாரத ஜனுதிபதி திரு. வி. வி. கிரி உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினுர்

ஜனுதிபதி மேலும் கூறியதாவது:

'நீங்கள் காட்டிய அன்பு எனக்கும் எனது மனைவிக்கும் இருபது வருடங்களுக்கு முன்னர் நாங்கள் இலங்கையில் தங்கியிருந்த காலத்து நினைவுகளையெல்லாம் ஞாபகப்படுத்தியுள்ளது. இலங்கை கடந்த 20 வருட காலங்களில் எவ்வளவோ முன்னேற்றமடைந்து காணப்படுகிறது. இத்தகையதொரு முன்னேற்றம் தவிர்க்கமுடியாத தொன்றாகும். ஆனுல் இலங்கையின் ஒரு குணவியல்பு மாத்திரம் மாற்றமடையவில்லை. அது தான் விருந்தாளிமேல் செலுத்தும் அன்புணர்ச்சியாகும். இது ஒருபோதும் மாற்றமடையாதென்றே நான் உறுதியாகக் கூறுவேன்.

தான் சென்ற இடங்களிலெல்லாம் இலங்கை மக்கள் தங்களுக்கே உரிய சிநேகபூர்வமான்மையோடும் அன்போடும் வரவேற்று உபசரித்தார்கள் எனக் குறிய ஜனுதிபதி யாழ். மேயருக்கும் அவரது அன்பான வரவேற்புபசாரத்துக்கும் தனக்கு வாசித்தளிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்துக்கும் நன்றி தெரிவித்தார்.

### காருக்கு மாலை

யாழ்ப்பாணம் இலங்கை இந்தியர் சங்கத்தினுல் ஜனுதிபதி கிரிக்கு முட்டாஸ் கடை சந்தியில் அளிக்கப்பட்ட வரவேற்பில் மக்கள் மாலை சூட்டுவதற்காக மெதுவாக வந்த ஜனுதிபதியின் காரை நெருங்கினுர்கள். பொலிஸார் இக் கூட்டத்தினரை கட்டுப்படுத்த பெரும்பாடு பட்டனர்.


பின்னுல் வந்த காரிலிருந்து பிரதமரின் மெய்க்காப்பாளரான திரு. எஸ். எல் அபயகுணவர்த்தன சடுதியாக இறங்கி வந்து அவ்விடத்திலுள்ள மக்களை தள்ளி விட்டார். இத்தருணத்தில் அவ்விடத்திலிருந்த மக்கள் தங்கள் கைகளிலிருந்த மாலைகளை ஜனுதிபதியின் காருக்குள் போட்டார்கள்.

## இந்தியாவில் இலங்கை வெற்றி

புதுடில்லி, ஜன, 11

மத்திய பிராந்திய பாடசாலை மாணவர் கோஷ்டிக்கும் இலங்கை மாணவர் கோஷ்டிக்குமிடையே இன்று நாக்பூரில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இலங்கை மாணவர் 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டினர்.

ஸ்கோர் விபரம்: மத்திய பிராந்திய கோஷ்டி: முதலாவது இன்னிங்ஸ் 195 ஓட்டங்கள்; 2-வது இன்னிங்ஸ் 113 ஓட்டங்கள். இலங்கை கோஷ்டி 1-வது இன்னிங்ஸ் 283; 2-வது இன்னிங்ஸ்: விக்கெட் நஷ்டமின்றி 26 ஓட்டங்கள்.



தமிழர் சுயாட்சிகழகம்

## தேர்தல் கமிஷனரால் அங்கீகரிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை எம். பி திரு. வ. நவரத்தினத்தை தலைவராகக் கொண்ட தமிழர் சுயாட்சிக் கழகம் தேர்தல் கமிஷனரால் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆர். ஜி. சேனநாயக்காவின் சிங்களமகாஜன கட்சியும் திரு. எட்மன் சமரக்கொடியின் புரட்சிவாத சமசமாஜகட்சியும் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை.

இதுவரை 9 கட்சிகள் மட்டுமே தேர்தல் கமிஷனரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன.

நியமனக் கட்டணச் சலுகைபெறும் அரசியல் கட்சியாக தேர்தல் கமிஷனரால் அங்கீகாரம் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி இரண்டு ஆட்சிமன்ற உறுப்பினர்களை அங்கத்தவர்களாக கொண்டிருக்க வேண்டுமென்பது விதியாகும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தேர்தல் கட்டுப்பணம் 250 ரூபாவாகும். மற்றும் சுயேட்சையாளர்களுக்கு கட்டுப்பணம் 1000 ரூபாவாகும்.

### பனம்பொருள் உற்பத்தியாளர்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை பனம்பொருள் விற்பனவு உற்பத்தியாளர் சங்க பொதுக்கூட்டம் திரு க. தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்றது. புதிய தலைவராக தீவுப்பகுதி வாலிபமுன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு வ. சண்முகராசா ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உறுப்பினர்களும் ஜனுதிபதியை வரவேற்ருர்கள். மேயர்நாகராசாவும், உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கமும் ஜனுதிபதிக்கு மாலை சூட்டினுர்கள். மாநகர சபை உறுப்பினரான திருமதி அந்தோனியா சுவாமிநாதர் திருமதி கிரிக்கு மாலை சூட்டினுர்.

அங்கிருந்து கார் பவனி புறப்பட்டு ஸ்ரான்லி வீதி வழியாக முட்டாஸ் கடை சந்தியை வந்தடைந்தது. ஊர்வலம் சென்ற வழியெல்லாம் வீடுகள் தோறும் பூரண கும்பம்வைத்து வரவேற்றனர். முட்டாஸ்கடை சந்தியில் யாழ். இலங்கை இந்தியர் சங்கம் பெரிய சிகரம் அமைத்து பூரண கும்பம் வைத்து ஜனுதிபதியை வரவேற்றது. அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரத்து சந்தியை வந்தடைந்தது. காங்கேசன்துறை வீதியில் உள்ள கடைகள் எல்லாம் கொடிகளாலும், மாவிலை தோரணங்களாலும் வாழை, கமுகு மரங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பூரணகும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக மகாத்மாகாந்தி வீதியை வந்தடைந்தது.

மகாத்மாகாந்தி வீதியின் இரு கரையிலும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் இந்திய தேசிய கொடியை கையில் ஏந்திய வண்ணம் அணிவகுத்து நின்றனர். அப்பால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களும் சாரணர்களும் அணிவகுத்து நின்றனர்.

### வெடி கொளுத்தி ஆரவாரம்

ஊர்வலம் காலை 10-30 மணிக்கு பிரதானவீதி நூல் நிலைய வீதிச் சந்தியை வந்த களை மேயர் ஜனுதிபதிக்கு அறிமுகம்செய்துவைத்தார்.

நகரமண்டபம் கொடிகளாலும்மாவிலைத்தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது அழைப்பிதழ் வைத்திருப்பவர்கள் மட்டுமே நகரமண்டப வளவுக்குள்ளே அனுமதிக்கப் பட்டனர் நகர மண்டப வாசலில் இலங்கை இந்திய தேசிய கொடிகள் பறக்கவிட்டிருந்தன நகரமண்டப முன் வீதியிலும் ஏராளமானேர் தொடர்ந்து. மேயரினுல் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் கலந்து கொண்டார். பின் அங்கிருந்து அரசாங்க விருந்தினர் விடுதியான கிங்ஸ்கவுஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மதிய போசன விருந்து அளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஜனுதிபதிக்கு வரவேற்பு அளிக்கும் வரை வான மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டது.

கைதடி

## ஆயுள்வேத வைத்தியசாலை: வேலைகள் ஆரம்பம்

கைதடி, ஞாயிறு

கைதடியில் அமைக்கப்படுவதாயிருந்த நவீன ஆயுள்வேத வைத்தியசாலை, வைத்தியக் கல்லூரிக்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 67-ம் ஆண்டு ஜுலை 27-ம் திகதி இக்கட்டடத்திற்கான அத்திபாரக்கல்லை சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜயவர்த்தன நாட்டியது தெரிந்ததே.

கடந்த இரண்டாண்டுகளுக்குமேலாக இதுசம்பந்தமாக எவ்வித வேலைகளும் தொடங்கப்படாதிருந்தது வடபகுதி மக்கள் மத்தியில் ஐயத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருந்தது

இவ்வைத்தியசாலைக்கு 6 லட்சம் ரூபா செலவிடப்படுமென்றும், முதலில் வைத்தியசாலையையும் பின்னர் கல்லூரியையும் அமைப்பதென்றும், சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கட்டட வேலைகளைப் பொதுமராமத்து இலாகாவே மேற்கொள்ளுமென்றும், இதற்குத்தேவையான வேலையாட்கள் தொழிலிணைப்புக் காரியாலயம் மூலம் திரட்டப்படுமென்றும், கிணறு வெட்டுதல வேலி போடுதல் போன்ற வேலைகள் தனிப்பட்ட கொந்தராத்துக்காரரிடம் ஒப்படைக்கப்படுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

தகவலறிந்த கைதடி, நாவற்குழி, மட்டுவில் பகுதி மக்கள் தொழில் கேட்டுத் தமது பெயரைத் தொழில் இணைப்புக் காரியாலயத்தில் பதிந்துவருகின்றனர்.

### ஆலயம் விஸ்தரிக்கப்படும்

வேலணை, ஞாயிறு

வேலணை வங்களாவடி முருகன் ஆலய விஸ்தரிப்புத் தேவைக்காகச் சரஸ்வதி வித்தியாசாலை அருகிலுள்ள சைவ வித்தியாலய சங்கத்தின் காணியில் ஒரு பகுதியைத் தருமாறு குறித்த ஆலயப் பரிபாலனசபை கோரியுள்ளது. காணி கிடைத்ததும் ஆலய விஸ்தரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

# பியாப்ரா தலைநகர் வீழ்ச்சி: கேணல் ஓஜுக்குவெளியேறினுர்

லேகோஸ், ஜன. 11

பியாப்ரா தலைவர் கேர்ணல் ஓஜுக்கு நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

அமைதி காணும் நோக்கத்துடன் தாம் நாட்டை விட்டு வெளியேறுவதாக நேற்று அவர் பியாப்ரா ரேடியோவில் அறிவித்தார். எங்கே போகிறுர், எப்படிப் போகிறுர், எப்போது போகிறுர் என்பவை பற்றி அவர் எதுவித தகவலும் கொடுக்கவில்லை.

இதற்கிடையில் பியாப்ராவின் தலைநகரான ஒவேரி தம்வசம் வீழ்ந்துவிட்டதாக நைஜீரியப் படையினர் அறிவித்துள்ளனர். இந்த நகர்மீது கடுமையான இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பது பற்றியும் அவர்கள் அறிவித்திருக்கின்றனர். வீழ்ச்சியுற்றதாக அறிவிக்கப்பட்டபோதிலும் இந்த நகரிலிருந்து பியாப்ரா ரேடியோ செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

தியேட்டர் ஒன்றுக்கு மனேஜரும், கஷியரும் தேவை. பிணைப்பணம் ரூ. 3000/- ரூ. 2500/- முன் அனுபவங்களுடன் விளம்பர இலக்கம் 1767, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1767

### கல்வி

காலை மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தக பாடங்கள், விசேஷ ஆங்கிலம், சிங்களம். தாமதிக்காது விண்ணப்பிக்கவும். (யாழ்ப்பாணம் டியூடோறியல் கல்லூரி, 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1765

### விற்பனைக்கு

காணி:

13 1/4 பரப்புள்ள வீடும் வளவும் விலை பரப்பு ரூபா 4000/- சாங்கேசன்துறை றேட்டில் இருந்து அரை மைலுக்கப்பால், தெல்லிப்பளை கிழக்கு குருநாத சுவாமி கோவிலுக்கு அருகாமையில் இருக்கிறது. 32 பரப்புள்ள நெற்காணி விலை பரப்பு ரூபா 750/- உடுவில் குளத்துக்கருகாமையில் இருக்கிறது. தொடர்பு கொள்ளவும். சரவணமுத்து, நவவாசா, ஏழாங்கட்டை ஒழுங்கை, மல்லாகம். 1766


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 12—1—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலா


## பிரிவிடுதல் நொத்தீஸ்

### மன்னார் டிஸ்திறிக் கோட்டில்

1. கந்தையா விஜசித்தம்பி
2 பெண் அபிராமிப்பிள்ளை உயிலங்குளம் துணுக்காய் வழக்காளிகள்.

இல. 138

எதிராக

1. கந்தையா சோமசுந்தரமும்
2. பெண் பாறுபதிப்பிள்ளை துணுக்காய்
3. தில்லைநாதர் குமாரசாமியும்
4. பெண் வள்ளியம்மை வேரவில் பூநகரி
5. காசிப்பிள்ளை சுப்பிரமணியம் உயிலங்குளம்
6. திருநாவுக்கரசு மகள் மஞ்னேன்மணி உயிலங்குளம்
7. கோவிந்தபிள்ளை வயிரமுத்து ஆத்திமோட்டை
8. வி. சிவகுரு விடத்தல்தீவு

எதிரிகள்

இலுப்பைக் கடவை இறைமாந்தைப்பகுதி மன்னார் டிஸ்திறிக் வடமாகாணத்திலுள்ள.

1. திகழிக்குளம் பிறவயல் அலவலைக்கமம் வெட்டுக்காடு கழிக்கிண்டிக்கமம் வண்ணுகமம் மேட்டுக்கமம் குஞ்சுப்பாளன்தறை மரக்கால் 300.
2. திகழிவயல் 61 ஏக்கர் 1 றூட் 26 பேட்சு
3. திகழிக் கமம் 26 ஏக்கர்

என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கிறதென்று இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1970-ம் ஆண்டுமாசி மாதம் 3-ந் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி.

செ. சடாச்சரம்
பதில் சக்கிடுத்தார்.

1970-ம் ஆண்டு தைமாதம் 3-ந் திகதி.

1910


பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வயலினிசை, 6-30 இராமசஞ்சிகை,

# செய்திச் சுருக்கம்

### இலவச அரிசி

திருக்கோணமலை அரசாங்க அதிபர் மூதூர்ப் பகுதியில் உள்ள இரண்டாயிரம மக்களுக்கு இலவச பங்கீட்டரிசி வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார். அரசாங்க அதிகாரிகள் கிண்யா மூதூர் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி வருகின்றனர்.

0 0 0

### 825 கொலைகள்

1969-ம் ஆண்டில் 825 கொலைகள் நிகழ்ந்துள்ளதாகப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது இதற்கு முன்னைய ஆண்டிலும் பார்க்க இத்தொகை கூடியதாகவுள்ளதாகவும் கடந்த டிசம்பர் மாதத்தில் மாத்திரமே 77 கொலைகள் சம்பவித்ததாகவும் மேற்படி காரியாலயம் அறிவித்துள்ளது.

0 0 0

### சுகாதார இலாகாவின் எச்சரிக்கை

சமீபத்தில் பெய்த கடும் மழையினால் வெள்ளம்மேற்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக சுகாதார இலாகாவினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

கிணற்றினுள் மருந்து தெளித்து நீரைச் சுத்தப்படுத்துமாறும் நீரைக் கொதிக்க வைத்தும் குடிக்குமாறும் சுகாதார இலாகா அறிவித்துள்ளது. மேலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ளவர்கள் எவருக்கேனும் பேதி, காய்ச்சல், வாந்தி ஏற்பட்டால் உடனடியாக சமீபத்திலுள்ள சுகாதாரக் கந்தோருக்குச் சென்று அறிவிக்குமாறும் மேற்படி இலாகா அறிவித்துள்ளது.

0 0 0

### ஜப்பானின் உதவி

ஜப்பானிய அரசாங்கம் இலங்கையின் வெள்ள நிவாரண வேலைகளுக்காக ஐந்து லட்சம் ரூபா வழங்குவதென முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

0 0 0

### இலங்கை பிரதிநிதிகள்

கோலாலம்பூரில் நடைபெறும் தேசிய அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் பொருளாதாரத் திணைக்களத்தின் தற்காலிக டைரக்டரான டாக்டர் திரு. வீ. கணேசலிங்கமும், தகவல் இலாகா டைரக்டர் எஸ் எல். பி. அமுனுகமையும் இலங்கையின் சார்பில் கலந்து கொள்கின்றனர். இக் கருத்தரங்கில் 13 நாடுகள் பங்குபற்றுகின்றன.

0 0 0

### தாமதம்

தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தின் வேலைகள் துரிதபாக நடைபெறவில்லையெனக் கூறப்படுகிறது. தொழில் நுட்பக் கல்விக்கான அமைப்பதில் தாமதம் ஏற்படுவதாலும் நிர்வாக அலுவலகக் கட்டிடங்களை நிறுவுவதில் ஏற்படும் தாமதமுமே தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தின் வேலைகள் தாமதமாவதற்குக் காரணம் எனத் தெரிகிறது.

0 0 0

### பிரதிநிதிகளுக்கு அனுமதி

ஆட்சிமன்ற அங்கத்தவர்களுக்கு மட்டுமே அதாவது தற்போதுள்ள அங்கத்தவர்களுக்கு மட்டுமே வெளிநாடுகளில் இருந்து கார்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குவதெனச் சனப்பிரதிநிதிகள் சபைத் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

0 0 0

### மறுப்பு

இலங்கைக்கு அனுப்பப்படும் பொருட்களை இன்சூர் செய்வதற்கு அநேக வெளிநாட்டு கம்பனிகள் மறுப்புத் தெரிவித்துள்ளன. கொழும்புத்துறைமுகத்தில் அடிக்கடி திருட்டுக்கள் நடைபெறுவதே மேற்படி கம்பனிகள் இன்சூர் செய்ய மறுப்பதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜீ.ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
ஒளிவிளக்கு


## கோப்பாய்ச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு விவேகானந்தசபை

# சைவசமய பாடப்பரீட்சையில் பரிசு பெற்ற மாணவர்கள்

கோட்டை, ஞாயிறு

கொழும்பு விவேகானந்த சபையாரால் 1968ம் ஆண்டு நடாத்தப்பெற்ற அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீட்சையில் வித்தியாசாலைப்பரிசில் பெற்றவர்களின பெயர்ப் பட்டியலின் ஒருபகுதி நேற்று வெளியானது. மிகுதி விபரம் கீழே தரப்படுகிறது.

(ஒவ்வொரு மாணவருக்கும் எதிரே யுள்ள இலக்கங்கள் அவ்வப் பிரிவுகளைக் குறிக்கும். 1 பாலபிரிவு-1, 2 பாலர்பிரிவு-11, 3 ஆரம்ப பிரிவு-1, 4 ஆரம்ப பிரிவு-11, 5 கீழ்ப்பிரிவு-1 6 கீழ்ப்பிரிவு-11, 7 மத்திய பிரிவு, 8 மேற்பிரிவு-1 9 மேற்பிரிவு-11

பருத்தித்துறை மெதடிஸ்த்பெண்கள் பாடசாலை: 4 தி பவானி, 5 ச அருந்ததி, 6 சு பாலச்சந்திரா 7 ந புஷ்பரஞ்சினி, 8 தி மங்கையற்கரசி, 9 கா அழகராணி.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி:- 5 சி ஜெயரத்தினம், 6 சோ ஞானசேகரம், 7 தெ கலாறூபன்.

பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாசாலை:- 1 சு நந்தகுமார், 2 ந சிவபாலன், 3 நா பவானி

யாழ். உடுத்துறைமகாவித்தியாலயம்:- 3 க சிறீவள்ளி நாயகி, 9 வை மெய் வெளிச்சம்.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை:- 2 மு சலாமோகன், 3 இ பிரேமபகீரதன், 4 மு பிரியதரிசினிகௌரி.

வல்வெட்டித்துறை அ மி பாடசாலை:- 3 வே பத்மாவதி.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி:- 5 க தயாபரன், 6 ர ஹரிதாஸ், 7 ச ராஜினி, 9 இ சிவராமலிங்கம்.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி:- 7 த சிவமணி, 9 ஆ கிருபாதேவி, 8 பொ பார்வதகுமாரி.

யாழ். உடுப்பிட்டி அ மி பாடசாலை:- 4 த கிருஷ்ணமூர்த்தி,

யாழ். கம்பர்மலை அ க பாடசாலை:- 2 செ குகனேஸ்வரி, 3 உ முருகேசு, 4 ... ஜயகுமார்.

... சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை:- 3 கி அம்பிகை 4 பொ ...

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை: 2 க சுஜாதா, பெ இந்திரா.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி: 4 கு ரோகினி, 5 ந ரவிந்திரன், த சத்தியராணி, 6 க சுகந்தா, 7 மா அம்பிகாதேவி, 8 ந அமிர்தகௌரி, 9 க நவரத்தினம்.

வரணி மகா வித்தியாலயம்: 4 க நடராசா, வே இராசமணி, 5 சி ஸ்ரீ குமார். 7 இ இராசதுரை, 9 க இராசராசேஸ்வரி.

கேகாலை சாந்தமரியாள் தமிழ் மகா வித்தியாலயம்: 7 மு கணேசன், 8 ச காளிமுத்து, 9 சி ஆறுமுகம்.

கொட்டாஞ்சேனை தமிழ் ஆரம்ப பாடசாலை: 1 க பரமேஸ்வரி, 3 த ரேணுகா.

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாசாலை: 3 சு குமுதினி, 4 இ கிருபைலிங்கம்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரிவித்தியாசாலை. 1 ச பிரேமாவதி, 2 அ கமலராணி, 3 கு கிருபாகரன், 4 மா யோகேஸ்வரன், 5 ந பகீரதி.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகா வித்தியாலயம்: 6 கு காந்திமதி, 8 ச தெய்வநாயகி, 9 இ விமலாம்பிகை, மா விஜயகுலசிங்கம்.

அரியாலை ஸ்ரீ பார்வதி அ த க பாடசாலை: 4 கை சிவநாதன்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி: 3 ஆ சிவக்குமார், 4 சி சுரேந்திரன், வி சிவகுமாரன், வெ ரவீந்திரன், 5 சி ஓம்பகவான், 6 க உமாசரன், 7 சி யோகேந்திரா, 8 மு இரத்தினபாலன், கரஞ்சித், 9 மு சிவகுமாரன்

யாழ்ப்பாண சேனியதெரு மகா வித்தியாலயம்: 4 வ கணேசரர்சா, 5 இ தேவதேவி.

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரி தமிழ் வித்தியாசாலை 2 சி இராசேந்திரன், 3 அ யோகேந்திரன், ப ஜெயகுமார், 4 செ குமாரதேவன், 6 ப ஜெயந்திமலர் (உ வந்தளிப்பு)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி: 6 ப தர்மாவதி, 9 மு மேனகா ...

உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை: 4 ந நந்தினி

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை: 2 க பாமா, 4 நா வத்சலாதேவி, 9 க ...

பண்ணாகம்மெய்கண்டான் மகா வித்தியாலயம்: 4 ச. மோகனகிருஷ்ணன், 9 த. சந்ததியார்.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை: 2 க நாகராசா (உவந்தளிப்பு), 3 ச முருகானந்தன், 4 ப செந்தில்நாதன், 5 ம சுகஸ்தா, 6 ம சந்திராணி

யா/அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்: 3 சி இராசேஸ்வரி, சோ. நிர்மலாகுமாரி.

காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை 4 செ செல்வரூபி.

காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை: 3 க சிவலிங்கம், 4 த. தவேந்திரன்.

காரைநகர்கிழக்கு சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை: 4 க ஸ்ரீரஞ்சன்.

யா. கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயம்: 6 ஆ. பிரேமலதா.

யா. சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை: 3 க ஆனந்தி, மா யோகராணி, 4 மு. கேதீஸ்வரன்.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை: 4 வி குமரகுருபரன், 3 சு பேரின்பநாயகி.

வேலணை மத்திய மகா வித்தியாலயம்: 5 இ குகப்பிரியை, 9 நா லோகேஷ்வரன், ச சாந்தினி, 7 ம வரதலட்சுமி, 8 சு கேதாரநாதன், 9 இ இராஜகோகிலம்.

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாசாலை: 3 த. தர்மநாயகி.

புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலயம்: 5 க சிவபாலரத்தினம், 6 வி தியாகராசா, 7 ந கமலநிதி 8 ந. சத்திவேல், 6 கலைச்செல்வி.

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை: 3 சோ சந்திரவதனு, 4 க செல்வகுமாரி, சோ தனலட்சுமி

நயினாதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை: 3 ந தருமகுலசிங்கம், 4 இ ஸ்ரீகாந்தராசா 5 நி கதிர்வேல்

நயினாதீவு ஸ்ரீநாகபூஷனி கனிட்ட மகா வித்தியாலயம்: 3 கா பிரேமலதா, பாகளினி, 4 கு கௌசல்யா, ந நீலாம்பிகை, 5 கு இளங்கோ.

கொழும்பு றோயல் கல்லூரி: 8 வி விஜேந்திரன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி: 5 ச சற்குணபாலன் 6 சு ஸ்ரீநந்தகுமார், 7 ச அமிர்தலிங்கம், 8 க தவலிங்கம், 3 சு ஆனந்தநடராசா

(முற்றும்)

### புகார்

சித்தன்கேணி, ஞாயிறு

பாதுகாப்பிற்காக, கோயிலொன்றின் முன்பக்கத்தில் போடப்பட்ட வேலி. அன்றிரவே அகற்றப்பட்டுள்ளதாம்.

வட்டுக்கோட்டை மேற்கில் உள்ள வீரபத்திரர் கோயில் முன் வீதியில் போடப்பட்ட வேலியைச் சிலர் அகற்றினர்களாம். இதுபற்றிப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

### தொல்லை

உருத்திரபுரம், ஞாயிறு

உருத்திரபுரப் பகுதியில் நுளம்புத்தொல்லையால் மக்கள் மிகவும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர். இதனால் மலேரியா பரவலாம் என்ற அச்சம் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. நுளம்புத் தொல்லையைப்போக்க மருந்து தெளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### புங்குடுதீவில் உள்ளூராட்சி வாரம்

புங்குடுதீவு, சனி

உள்ளூராட்சிவாரக்கொண்டாட்டம் பற்றி ஆராய்வதற்காக இன்று புங்குடுதீவு கிராமசபை மண்டபத்தில் உபதலைவர் திரு. பெ. கார்த்திகேசு தலைமையில் கூட்டம் ஒன்றுநடைபெறவிருக்கிறது. இதில்இப்பகுதிசனசமூகநிலையப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு கொண்டாட்டம் பற்றி ஆராய்வர்.

# பெண் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 கிளாரினட், 7-45 நேயர்கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த

அடிமைப்பெண்



6வது வெற்றி வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த

திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]



சோ நடித்த

ஒளிவிளக்கு

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா2-30 மணி
எஸ்.எஸ்.ஆர். - விஜயகுமாரி நடித்த
சாரதா

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிறிபோயா,போயா 2-30மணி
சுந்தரராஜன்-நாகேஷ் நடித்த
ஆலயம்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி—எம்.ஜி.ஆர். நடித்த
கூண்டுக்கிளி
4-30க்கு மட்டும்
SWEET NIGHTS

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Shashi Kapoor, Heyley Mills
in
A MATTER OF INNOCENCE
(Panavision)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
David Janssen
in
WARNING SHOT
(Technicolor)
A Crisp, Crime Detective, Thriller


# கோப்பாய்ச் செய்திகள்

## நியமனம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் தபால் நிலைய அதிபராக திரு. எஸ். கந்தசாமி நியமனம் பெற்றுள்ளார். மேற்படி நிலைய அதிபராக கடமையாற்றிய திரு. ரி. எஸ். நடராசா யாழ்ப்பாணம்தபாற்கந்தோருக்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.

0 0 0

## இடமாற்றம் ரத்து

கோப்பாய் பொலிஸ் நிலைய அதிபர் திரு. கே. தர்மபாலாவின் இடமாற்றம் திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இவர் இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றஞ் செய்யப்படவிருந்தது தெரிந்ததே. இதற்கான பிரியாவிடை வைபவங்கள் யாவும் முடிவடைந்த பின்னரே இறுதிநேரத்தில் மேற்படி இடமாற்ற ரத்து அறிவித்தல் இவருக்கு கிடைத்ததாம்.

0 0 0

## பூர்த்தி

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் கட்டப்பெற்று வந்த ஆண்நோயாளர் விடுதி வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. இதற்கான திறப்புவிழா வெகுவிரைவில் நடாத்தப்படவுள்ளது.

0 0 0

## உள்ளூராட்சி வாரம்

கோப்பாய் கிராமசபை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் உள்ளூராட்சி வாரத்தை சிறந்த முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச்செய்து வருவதாக கோப்பாய் கி. ச. தலைவர் திரு. தி. பரமானந்தராசா தெரிவித்தார்.

...னேஸ்வரி, 3 உ முருகேசு, 4 க உதயகுமார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை:- 3 கி அம்பிகை 4 பொ சுஜாதா.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி:- 3 சு இராசேஸ்வரி, 4 த கானலோசனி,

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி: 3 ச சபேஸ்வரன், 4 ந ரவீந்திரன், 5 க சண்முகலிங்கம், 6 சி தயாராணி; 7 செ விஜயசுந்தரம்.

## செயற்கை முறையில் சினை

கோப்பாயிலுள்ள கால்நடைகளுக்கு செயற்கை முறையில் சினைப்படுத்தும் வைத்தியத்தொழிலை திருநெல்வேலி கால்நடை பண்ணையினர் மேற்கொண்டுள்ளனர்.

வலிகிழக்கு காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளையின் சிபார்சினுல் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழில் போயாதினம் தவிர்ந்த ஏனைய நாட்களில் கோப்பாய் ஐக்கிய கூட்டுத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் மேற்கொள்ளப்படும்.

0 0 0

## 100 பரப்பு காணி சுவீகரிப்பு

கோப்பாய் தொகுதியிலுள்ள புத்தூர் கிராமவாசிகளுக்கு வீடற்றோருக்கு குடியிருப்பு நிலமாக வழங்குவதற்கென வேம்பிராய் பகுதியிலுள்ள 100 பரப்புக் காணியை அரசாங்கம் சுவீகரிக்கவுள்ளது.

இக்குடியேற்றத் திட்டத்தினுல் இப்பகுதியிலுள்ள காணியற்றோருக்கு நிலம் கிடைக்கவிருக்கிறது.

இது குறித்து கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி. கதிரவேலுப்பிள்ளை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை: 4 ந நந்தினி

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை: 2 க பாமா, 4 நா வத்சலாதேவி, 9 க தயாநிதி

உரும்பராய் இந்துக் கல்லூரி: 5 வை கமலநாதன், கு தயாபரன், 7 ந இராசமலர்

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்: 5 இ ரஞ்சனி, 6 நா பவானி, 7 ஐ கைலாசபூபதி, 8 ந நவமணி, 9 சி யோகம்

காங்கேசன்துறை ஆங்கில மகா வித்தியாலயம்: 8 சு தயாநிதி, 9 க வரதராசன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி: 2 கு நளினி, 3 க முகுந்தன், 4 து கஜேந்திரா, 5 ச ஸ்ரீகரன், 6 சி இரத்தினராணி, 7 சி நாகேந்திரா, 9 க குகநேசன்

மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை: 3 கா சிவநேசன்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி: 4 ஆ குலரஞ்சன், 5 து ஸ்ரீ மோகனராசா, 6 சி நிராகுலகாந்தன், 7 மா லோகசவுந்தரி, 8 மா குருகேந்திராணி, 9 பொ தவராசா

சுன்னுகம் இராமநாதன் கல்லூரி: 7 சி அரியமலர் ஆ காயித்திரி ஆனந்தரமணி, பொ. ரஞ்சனி, 8 செ ஞானமலர்

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை: 3 ந பிரபாவதி, 4 பொ பாலசுப்பிரமணியம் ப தமிழரசி, 9 க கனகசபாபதி, வை குகதாஸ், மு விஜயரகுநாதன்,

பிளவத்தை அமெரிக்கன் மிஷன் த க பாடசாலை' 4 பு கமலவதனி.

கலகா அ த க பாடசாலை: 4 க யோகராணி.

## கிழக்கு மாகாணத்தில் குஷ்டரோகிகள் தொகை அதிகரிக்கிறது

மட்டக்களப்பு, ஞாயிறு

கிழக்கு மாகாணத்தில் மக்கள் பீதியடையத்தக்க அளவுக்கு குஷ்டரோக நோய் அதிகரித்து வருவதாககுஷ்டரோகத் தடுப்பியக்கத்தைச் சேர்ந்த ஒருவர் அறிவித்துள்ளார். இவ் இயக்கத்தின் புள்ளிவிபரப்படி 800க்கும் மேற்பட்ட குஷ்டரோக நோயாளர்கள்கிழக்கு மாகாணத்தில் உள்ளதாகத் தெரிகிறது.

கிழக்கு மாகாணத்தில் இந்நோய்க்கு 5 சிகிச்சை நிலையங்களே யுள்ளதாகவும் இந்நிலையங்களில் போதிய உபகரணங்களும் மருந்து வகைகளும் இல்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

கோட்டை, ஞாயிறு

ஆக்ஸ்பேர்ட் சர்வகலாசாலையைச் சேர்ந்த சோர்மலிலி சென் ஹியூ கல்லூரிகள் பெண் பட்டதாரிகளுக்கு இரு உபகாரநிதிச் சலுகைகள் வழங்கமுன்வந்துள்ளன. 30 வயதிற்குட்பட்ட பெண் பட்டதாரிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ம் திகதிக்கு முன்பாக ஆக்ஸ்பேர்ட் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்த உபகாரநிதித் திட்டத்தினகீழ் இருவருடகால உயர்கல்வி மேற்கொள்ளலாம். உயர்கலாநிதி மேற்படிப்புக்காகவே இவ்வுபகாரநிதிச் சலுகை வழங்கப்படினும் இதற்கு விண்ணப்பிக்க கலாநிதிப் பட்டம் தேவையில்லை கலை அல்லது விஞ்ஞானத் துறையில் இவர்கள் ஆராய்ச்சியை மேற்சொள்ளல் வேண்டும். அத்தோடு ஒரு குறிப்பிட்ட காலம்வரை இவர்கள் இக்கல்லூரிகளில் கல்வி போதிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

## "உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துவிட்டன"

— டாக்டர் என். எம்

எஹலியகொட, ஞாயிறு

'கடந்த சில வருடங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் விஷம்போல் ஏறிவிட்டன. மக்கள் இதனல் பெருத்த கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள்' என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம் பெரேரா எட்டியாந்தோட்டையிலுள்ள கமுலுமுல்லப்பகுதியில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்,

டாக்டர் என். எம். பெரேரா மேலும் பேசுகையில்: இப்போதைய அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள் இப்போது தாங்கள் விட்ட குறையை உணருகிறார்களென்றும் கூட்டணியினர் மீண்டும் பதவிக்கு வரவேண்டுமென அவர்கள் விரும்புகிறார்களென்றும் கூறினார்.

அரசாங்கம் மக்களுக்கு அளித்த உறுதி மொழிகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டதென்றும் டாக்டர் என்.எம் குற்றஞ்சாட்டினார்.

மற்றும்பலரும் பேசினர்.

## "பொருளாதார அபிவிருத்திக்கு கைத்தொழிலே திறவு கோல்"

— பிலிப்

பத்தேஹம, ஞாயிறு

'கைத்தொழில் அபிவிருத்தியே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு திறவுகோலாகும். கிராமங்களிலும் முக்கிய பகுதிகளிலும் கைத்தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும் அப்போதுதான் நாடு முன்னேற்றப்பாதையை நோக்கிச் செல்லும்.'

காலியிலுள்ள பூசாலில் கைத்தொழில் பேட்டை வேலைகளை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு பிலிப் குணவர்த்தன கூறினார்.

திரு பிலிப் குணவர்த்தன மேலும் பேசுகையில் 'ஒவ்வொரு கிராமத்திலும் கைத்தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முயற்சியே இங்கு நிறுவப்படும் கைத்தொழில் பேட்டையாகும். வேலையில்லாதிருக்கும் ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்கு அவர்களுடைய கிராமங்களிலேயே இதன்மூலம் வேலைவாய்ப்பளிக்க தேசிய அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது. முன்னைய அரசாங்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதனையும் செய்யவில்லை. அப்போது நாடு 'வங்குரோத்து' நிலையிலிருந்தது. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னரே நாடு ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிசெல்ல ஆரம்பித்தது இங்கு நிறுவப்படும் கைத்தொழில் பேட்டையில் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்' என்று கூறினார்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தகநாயக்கா உட்பட மற்றும் பலரும் பேசினர்.


யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா
மற்றும்பலர் நடித்த
அஞ்சல்பெட்டி 520



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியாப்ரா வசமிருந்த மூன்று முக்கிய நகரங்கள் வீழ்ச்சி

## நைஜீரியா உள்நாட்டுக்கலகம் முடிவடையும் அறிகுறி

லேகோஸ், ஜனவரி 11

**நைஜீரிய உள்நாட்டுப் போர் முடிவடையும் கட்டத்தை அண்மிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.**

**பிரிந்துபோன கிழக்கு பியாவ்ராவின் மிக முக்கிய நகர்கள் பலவற்றின் மீது சமஷ்டி படைகள் மூர்க்கமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.**

பியாவ்ராவின் மிக முக்கிய நகரமான ஒவேரியின் மீது இப்பொழுது கடும் தாக்குதல் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றது. வெளி உலகுடன் பியாவ்ராவுக்குள்ள தொடர்புகளுக்கு இந்த நகரமே முக்கியமாக இருந்துவந்துள்ளது.

ஒவேரியில் பத்து லட்சம் மக்களுக்கு மேல் வீடுவாசல்களை இழந்து தெருக்களில் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

சமஷ்டி படைகளின் வலுத்தாக்குதலின் காரணமாக இந்த மக்கள் இக்கதிக்குள்ளாகியிருக்கின்றனர்.

ஏற்கனவே பல நகர்களிலிருந்து பியாவ்ரா படைகள் ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கியுள்ளனவாம்.

மூன்று முக்கிய நகர்கள் ஏற்கனவே சமஷ்டி படைகளிடம் வீழ்ச்சியுற்றுவிட்டனவாம். ஒவேரியும் வீழ்ந்துவிட்டால் நைஜீரிய உள்நாட்டுக்கலகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக முடியுமென்று கருதப்படுகின்றது.

கலகங்களினால் கஷ்டங்களுக்குள்ளாகிய மக்களுக்கு நிவாரண வசதிகள் செய்து கொடுப்பதில் சர்வதேச செஞ்சிலுவைப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

## கள்ள நாணயத்தில் காந்தியின் உருவம்

### 2 பெண்களுடன் ஏழு பேர் கைது

பெங்களூர், ஜன. 11

காந்திஜியின் பெயராலேயே கள்ளநாணயம் தயாரித்தார்களாம். இதில் இரண்டு பெண்களும் ஈடுபட்டிருந்தனர்.

காந்திஜி தலைபொறித்து கள்ள பத்து ரூபாய் நாணயங்கள், 50 பைசா நேரு நாணயங்கள், 2 ரூபாய் நோட்டுக்களைத் தயாரித்ததாக இரண்டு ஸ்திரீகள் உட்பட 7 பேரைப் போலீஸார் கைது செய்துள்ளனர்.

சி ஐ டி விசேஷ அதிகாரி பி.பி.ரேவண்ணு நிருபர்களிடம் இத்தகவலை வெளியிட்டார். கேரளாவைச் சேர்ந்த ஒரு கோஷ்டி கள்ள நாணயங்களையும், ரூபாய் நோட்டுக்களையும் தயாரிப்பதாகக் கிடைத்த தகவல் பேரில் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொல்லம், கோட்டயம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

நகரின் எல்லையில் ஒதுக்குப்புறமான பகுதியில் கள்ள நாணயம் நோட்டுத் தயாரிப்பவர்கள் கட்டியுள்ள ஒரு பெரிய வீட்டில் தம்முடைய இலாகாவைச் சேர்ந்தவர்கள் சோதனை போட்டதாக ரேவண்ணு கூறினார். இரண்டு ரூபாய் நோட்டுக்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த போது ஒரு ஸ்திரீ உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டதாகக் கூறினார்.

சில கள்ள நோட்டுகள் நூறு 50 பைசா கள்ளநாணயங்கள், சில ரசாயனப் பொருள்கள், பிளாக்குகள், அச்சு இயந்திரங்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை விசாரித்த பிறகு மற்றொரு வீட்டைப் போலீசார் சோதனைபோட்டனர். அங்கு ஒருவர் தம்முடைய மனைவியுடன் பத்து ரூபாய் நாணயங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். அவர்களிருவரும் கைது செய்யப்பட்டனர். அங்கிருந்து கள்ள நோட்டு தயாரிப்பதற்கான கருவிகளும், பூர்த்தியாகாத 100 நாணயங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முன்பு இதே போன்ற குற்றத்திற்காக கேரளாவில் 5 ஆண்டுக்கு கடுங்காவல் தண்டனை அனுபவித்திருக்கிறார் என்று ரேவண்ணு தெரிவித்தார்.

# "கண்ணதாசனை தமிழ்நாடு கௌரவிக்கும் நாள்வரும்"

--- முதல்வர் கருணாநிதி

## விருது பெற்ற கவிஞருக்கு பிரமுகர்கள் பாராட்டு

**சென்னை, ஜன. 11**

**கவிஞர் கண்ணதாஸனின் கவித்திறனைப்பாராட்டி தமிழ்நாடு மக்கள் அவரைக் கௌரவிக்கும் நாள் வெகு தொலைவில்இல்லை என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார்.**

1968-ம் ஆண்டு சிறந்த கவிதைகளைப் படைத்த கவிஞருக்கான மத்திய அரசின் விருதைப் பெற்றமைக்காக திரு கருணாநிதி அவரைப் பாராட்டினார்.

எழுத்தாளனுக்கு அரசியலைக் கைவிடுவது கஷ்டமாக இருக்கலாம் ஆனால் எந்த வாழ்க்கையாகஇருந்தபோதிலும் நிதானத்தை இழந்துவிடக்கூடாது என்று முதல்வர் குறிப்பிட்டார் புரட்சி நடிகர் எம் ஜி. ராமச்சந்திரனும் திரு. கண்ணதாசனைப் பாராட்டினார்.

1968-ம் ஆண்டு சிறந்த கவிஞருக்கானவிருதை பெற்றுள்ள கவிஞர் கண்ணதாசனுக்கு தென்இந்திய திரைப்பட ஸ்ரூடியோ சங்க ஆதரவில் பாராட்டு உபசாரம் அளிக்கப்பட்டது இந்த விழா ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடந்தது,

இவ்விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்பு மந்திரி குஜ்ரால் பேசுகையில், இலக்கிய நூல்களை பல்வேறு மொழிகளில்மொழிபெயர்க்க அரங்குகளை அமைக்கலாம் என்றும், அவ்வாறு செய்வது இதர மொழிகளில் உள்ள சிறப்புகளை அறிந்துகொள்ள மக்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

கண்ணதாசனின் கவிதைகளையும் அவர் பாராட்டினார். அவர் ஒரு சிறந்த கவிஞர் என்று குறிப்பிட்டார். தமிழில் அவர் சுமார் 2,000 கவிதைகளை இயற்றியுள்ளார் என்பதை கேட்டவுடன் தாம் ஆச்சரியமுற்றதாகவும் அவர் குறிப்பிட்

விழாவுக்குத் தலைமை வகித்த முதல்வர் கருணாநிதி, தாமும் கண்ணதாசனும் ஒரே அரசியல் கட்சியில் இருந்தபோது தங்கள் இருவருக்குமிடையேஇருந்த நெருக்கமான உறவைப் பற்றிக் குறிப்பிட்டார்.

எழுத்தாளருக்கு அரசியலைக் கைவிடுவது என்பது கஷ்டமாக இருக்கலாம். என்றாலும் எந்த வாழ்க்கையாகஇருந்தபோதிலும் நிதானம் தேவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

மத்திய அரசு கண்ணதாசனை கௌரவிப்பது தமக்கு மகிழ்ச்சியளிக்கிறது என்றும் அவரது கவித்திறனைப் பாராட்டி தமிழ்நாட்டு மக்கள் கௌரவிக்கும் நாள் தொலைவில்இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

மத்திய மந்திரி ரகுநாதரெட்டி, சுந்தர்லால். நஹதா சின்ன அண்ணாமலை, இராம அரங்கண்ணல் (எம் எல் ஏ) நடிகர் எம் ஜி ராமச்சந்திரன், முன்னாள் முதல்வர் எம் பக்தவத்சலம் ஆகியோரும் பாராட்டிப் பேசினர்.

ஏ வி மெய்யப்பன் அனைவரையும் வரவேற்றார்'

## 'சண்டித்தனம் செய்கிறார் மொரார்ஜி தேசாய்'

### பக்தவத்சலம் தாக்கு

சென்னை, ஜன. 11

'சிண்டிக்கேட் தலைவர் திரு மொரார்ஜி தேசாய் சண்டித்தனம் செய்கிறார். சுதந்திராவும் ஜனசங்கமும் இதற்குத் தாளம் போடுகின்றன' என்று தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் கூறினார்.

சிண்டிக்கேட் சினிமா நட்சத்திரமாக திருமதி தாரகசுவரிசின்ஹா விளங்குவதாக அவர் சொன்னார் இவருக்கு இந்திராவைத் தாக்குவதைத் தவிர வேறு லட்சியம் கிடையாது என்றார்.

சென்னை தியாகராயநகர் பஸ்நிலையம் அருகில் காங்கிரஸ் (இந்திரா ஆதரவு) பொதுக்கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பக்தவத்சலம் பேசியதாவது:

பம்பாய் காங்கிரசுக்கு அதிகம் பேர் வரவில்லை என்று சிண்டிகேட்காரர்கள் கூசாமல் பொய் பேசுகிறார்கள்,

நேருவையும் இந்திராவையும் சிண்டிகேட் சினிமா நட்சத்திரமான தாரகேசுவரியும் மற்ற சிண்டிகேட்காரர்களும் இன்று தாக்கிப் பேசுகிறார்கள். அவர்களுக்கு இந்திராவுக்... ...மும் தாளம் போடுகின்றன.

நிஜலிங்கப்பா ஜனநாயகத்தைப் புறக்கணிக்கிறார். ஒரு காலத்தில் எந்த ஜனசங்கத்தை பிற்போக்கு கட்சி என்றார்களோ அதே கட்சியை இன்று தேசிய ஸ்தாபனம் என்கிறார்கள்.

ஜனாதிபதி பதவி கிடைக்காததால் இந்திரா மீது கோபப்படுவதை நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் நேரு மீது பழி சொல்கிறார்களே. அதிலிருந்தே அவர்கள் மனோபாவம் புரியவில்லையா உங்களுக்கு?

### வெள்ளத்தில்

இந்தப் பிற்போக்காளர்கள் தடுத்தால் சோஷலிசம் வராமல் போய் விடுமா? வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போவது போல் இவர்கள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிடுவார்கள். இப்போதுதான் காங்கிரஸ் சுத்தமாக இருக்கிறது.

ஆமதாபாத் சிண்டிகேட் மகாநாட்டுக்கு போய்விட்டு பம்பாய்க்குவந்துஅங்கிருந்து பணம் கொடுக்காமல் ரயில் ஏறி சென்னைக்கு வந்தனர் சிண்டிகேட் காரர்கள். பம்பாய் மாநாட்டுக்கு நாங்கள்

# இஸ்ரேல் ஏவுகணை தளம் நிர்மூலமாக்கப்பட்டது

## எகிப்திய விமானப்படை உக்கிரமான தாக்குதல்

கெய்ரோ, ஜன. 11

**இஸ்ரேலியரின் இலக்குகள் மீது ஐக்கிய அரபுக்குடியரசு விமானப்படையினர்நேற்று மிகப்பெரிய தாக்குதல் ஒன்றைமேற்கொண்டு, ஏவுதளமொன்றை முற்றாக நிர்மூலமாக்கியதாக அறிவித்துள்ளனர்.**

சூயஸ்வளைகுடாவில் கிழக்குப் பிரதேசத்திலுள்ள இஸ்ரேலியர்ன் ராணுவநிலையங்கள் மீது ... தாக்குதல் ...களின் காட்டுமிராண்டிசெயலுக்கு ஒப்பாகும் என்று லெபனன் குறிப்பிட்டிருக்கின்றது.

### இஸ்ரேல் குற்றச்சாட்டு

பிரான்ஸ் லிபியாவுக்கு சண்டைவிமானங்கள் விற்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதை இஸ்ரேல் மிகமோசமாகக் குறைகூறியிருக்கின்றது.

## தீவுப்பகுதி நெசவாளர் கவலை

வேலணை, ஞாயிறு

தீவுப்பகுதியில் அநேக நெசவுசாலைகளில் சில தறிகளைத் தவிர ஏனைய தறிகள் இயங்காது இருப்பதாக இப்பகுதி நெசவு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்

# தமிழகச் செய்திகள்

### அரிசி ரேஷன் ரத்து

த...ழ்நாட்டில் சென்னை நக...லும் கோவையிலும் நான்கு ஆண்டுகளாக அமுலில் இருந்த உணவுப் பங்கீட்டு ... ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

உணவுக் கட்டுப்பாடு ரத்து... செய்யப்பட்டுள்ளதைத்

...லூரி மாணவி கடலில் குதித்துத் தற்கொலை செய்து கொண்ட...ர். சென்னை ஜார்ஜ்டவுன் நம்மாழ்வார் தெருவைச் சேர்ந்த சுகுணு 20 வயது என்பவர் தற்கொலை செய்து கொண்டவராவார். இவர் சென்னை மருத்துவக்க...ரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

னர்.

சூயஸ்வளைகுடாவில் கிழக்குப் பிரதேசத்திலுள்ள இஸ்ரேலியர்ன் ராணுவநிலையங்கள் மீது பலத்த தாக்குதல்களை நடத்தியுள்ளதாகவும் எகிப்தியர் அறிவித்தனர். சமீபகாலத்தில் ஐக்கிய அரபுக்குடியரசு படைகள் மேற்கொண்ட மிகப்பெரிய விமானத்தாக்குதல் இதுவாகும் என்று கூறப்படுகின்றது. அரபுக்குடியரசு விமானங்கள் அலை அலையாகப் பறந்து சென்று இஸ்ரேலிய நிலைகள் மீது இந்தத்தாக்குதல்களை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. தாக்குதலில் ஈடுபட்ட தங்கள் விமானங்கள் யாவும் பத்திரமாகத் தளங்களுக்குத் திரும்பியதாகவும் எகிப்தியர் கூறினார்கள் ஆனால் எகிப்திய விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்திவிட்டதாக இஸ்ரேலியா அறிவித்தனர்.

### வல்லரசுகளிடம் லெபனன் புகார்

இஸ்ரேலியர் அண்மைக் காலங்களில் லெபனன்தென் பகுதியில் நடத்தியதாக்குதல்கள் பற்றி லெபனன், வல்லரசுநாடுகளிடம் புகார் தெரிவித்திருக்கின்றது. அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு லெபனன் அனுப்பியுள்ள புகாரில், அண்மையில் இஸ்ரேலியர் எல்லைக்கிராமமொன்றிலிருந்து 21 கிராமவாசிகளைக் கடத்தி சென்றது பற்றி தெரிவித்துள்ளதோடு இது ஹிட்லர்காலத்திய நாஸி சண்டைவிமானங்கள் விற்பதற்கு ஒப்புக்கொண்டிருப்பதை இஸ்ரேல் மிகமோசமாகக் குறைகூறியிருக்கின்றது.

இது மேற்காஸியாவில் சண்டையை மேலும் வலுப்படுத்தும் என்றும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் வல்லரசு நாடுகளில் ஒன்றான பிரான்சின் நன்நோக்கத்தை இது காட்டுவதாக இல்லையென்றும் இஸ்ரேல் கூறியிருக்கின்றது.

லிபியா இஸ்ரேலுக்கு எதிரான அரபுக் கூட்டில் அண்மையில் சேர்ந்து கொண்டிருப்பதையும் இஸ்ரேல் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

லிபியாவுக்கு ஆயுதங்கள் விற்க பிரான்ஸ் முடிவு செய்திருப்பதை பிரான்சில் சில எதிர்க்கட்சிகளும் குறைகூறியிருக்கின்றன.

லிபியாவுக்கு 50 சண்டை விமானங்களை விற்பனை செய்வதற்கு பிரான்ஸ் முடிவு செய்திருப்பது தெரிந்ததே, 1967-ம் ஆண்டு அரபு இஸ்ரேல்யுத்தத்தில் கலந்து கொள்ளாத நாடு என்ற முறையிலேயே லிபியாவுக்கு அந்த விமானங்களைவிற்பனை செய்ய பிரான்ஸ் முடிவு செய்ததாகக் கூறப்பட்டது.

பிரான்ஸ் துறைமுகத்திலிருந்து 5 பீரங்கிப்படகுகள் காணுமல் போய், பின்னர் அவை மத்தியதரைக் கடல் வழியாக இஸ்ரேலுக்குப்போய் சேர்ந்ததையடுத்து பிரான்ஸ் லிபியாவுக்கு 50 சண்டைவிமானங்களை விற்க முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

# வெட்டப்பட்ட கால் நடந்து வந்ததா?

கராச்சி, ஜன 8

இங்கு ஒரு கால் கிடைத்தது பொலிசார் இரவெல்லாம் தேடி அந்தக் கால் எப்படி வந்தது என்ற மர்மத்தைக் கண்டுபிடித்தனர்.

மேற்குப் பாகிஸ்தான் அரசினர் மருத்துவ மனைக்குள் அரைகுறையாய்ப் புதையுண்டு கிடந்த ஒரு மனிதனின் வலக்கால் கண்டுபிடிக்கப்பட்டதும் அக்காலுக்குரியவரின் முண்டம் எங்கே என்று சுமார் 20 பொலிசார் இரவெல்லாம் தேடினர்.

புதிதாய் வெட்டியெடுக்கப்பட்ட அக்காலை மருத்துவமனை டாக்டர் ஒருவர் கண்டுபிடித்தார். உடனே பொலிசார் அங்கே சென்றனர்.

மருத்துவமனை ஊழியரையும், நோயாளிகளையும் விசாரித்ததில் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. கொலை நடந்திருக்கலாமென்று பொலிசார் வரவழைக்கப்பட்டனர். பொலிசார்விளக்குகள், மண்வெட்டிகள் ஆகியவற்றுடன் மருத்துவ மனையைச் சுற்றியுள்ளபகுதியைத் தோண்டித் துளாவினர்

விடியற்காலை நேரத்தில் காலுக்குரியவர் மருத்துவ மனைக்குள் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் ஒரு நோயாளி. அவருக்குக் கால் முறிந்ததால் அதை வெட்டி எடுத்தனர்.

அந்தக் கால் இப்போது சவக்கிடங்கில் சேர்க்கப்பட்டது. அது சவக்கிடங்கிலிருந்து கால்மைல் தொலைவிலுள்ள மருத்துவமனைக்கு எவ்வாறு 'நடந்து சென்றது' என்பது புரியாப் புதிராயிருக்கிறது.

நெசவுசாலைகளில் சில தறிகளைத் தவிர ஏனைய தறிகள் இயங்காது இருப்பதாக இப்பகுதி நெசவு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் நிலவும் நூல் தட்டுப்பாடும் றேயன் பட்டுநூல் தட்டுப்பாடுமே இவ்வித நிலைக்குக் காரணமெனக் கூறப்படுகிறது. சாரிகள் விற்பனையிலும் மந்தநிலை ஏற்பட்டிருப்பதோடு 6 ரூபா 67 சதத்திற்கு வாங்கும் சாரி நூலை இப்பொழுது ரூபா 9-89க்கு வாங்கி நெசவு செய்ய வேண்டியுள்ளதாம்.

## மாத்தறை நகரசபைப் புதிய தலைவர்

மாத்தறை, ஞாயிறு

மாத்தறை புதிய நகரசபைத்தலைவராக ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்த திரு எஸ் கே. பியதாசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு பியதாசாவுக்கு 6 வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு அபயசிங்காவுக்கு 4 வாக்குகளும் கிடைத்தன. திரு பி, கே. சந்திரதாசா உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

வேருவளை, ஞாயிறு

'தேசிய இளைஞர் பேரவை வேலையற்ற இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இது நல்லதொரு சந்தர்ப்பமென்றே சொல்லவேண்டும் என்று வேருவளைத் தொகுதியில் முதலாவது தேசிய இளைஞர் பேரவைக்கான முதலாவது முகாமை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார், 250 பேர் இந்த முகாமில் உள்ளனர்.

தேசிய இளைஞர் பேரவைத் தலைவர் திரு டி. எம் பி. பி, திஸநாயக்கா பேசுகையில் நாட்டுக்காக உழைத்த தேசிய வீரர்களை இளைஞர்கள் பின்பற்றவேண்டுமென்று கூறினார்.

நான்கு ஆண்டுகளாக அமுலில் இருந்த உணவுப் பங்கீட்டு முறை அடியோடு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

உணவுக் கட்டுப்பாடு ரத்துச்செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அரிசியை எவராவது பதுக்கல் செய்தவர்களும் தண்டனைகளுக்குள்ளாவார்கள் என்று முதல்வர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

### ராஜாஜி மகிழ்ச்சி

உணவு ரேஷன் ரத்துச் செய்யப்பட்ட செய்தி கிடைத்ததும் தாம் மகிழ்ச்சியுறுவதாக திரு. ராஜாஜி கூறியிருக்கிறார்.

அரிசி ரேஷன் ரத்துச் செய்யப்பட்டதன் மூலம் தமிழ் நாட்டில் அரிசி விலைகள் குறையுமென்று ஈ. வே. ராமசாமிப் பெரியார் கூறியிருக்கிறார். இதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இது மிகவும் பாராட்டுக்குரிய விஷயமென்றும் பெரியார் கூறினார்.

### கே. ஆர். ஆர் அண்ணன்

நடிகர் கே.ஆர்.ராமசாமியின் அண்ணன் கே. ஆர். கோவிந்தன் காலமானார்.

திரு. கோவிந்தன் அம்பாசமுத்திரத்தில் சில காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்தார். அவரை திரு. கே. ஆர்.ராமசாமி அருகிலிருந்து கவனித்துவந்தார். கடந்த திங்கட்கிழமை அவர் காலமானார்.

### பொங்கல் கொண்டாடுக

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும்படி தமிழ்நாடு கல்வியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

### அண்ணா பெயரில் மோசடி

அண்ணா உருவப்படத் திறப்பு விழாவை நடத்த, கல்லூரியில் படிக்கும் கேரள மாணவர்கள் ஏற்பாடுசெய்திருப்பதாகக் கூறி, பண மோசடி செய்ததாக ஒரு வாலிபர் கைதுசெய்யப்பட்டார்.

பிரபல விளம்பர நிறுவனமொன்றின் டைரக்டரிடம் இவர் கொடுத்த நோட்டீஸிலிருந்த கையெழுத்துக்கள் மூன்றும் ஒரே மாதிரியாக இருந்ததாய்ச் சந்தேகம் எழுந்ததாகவும, பொலிசார் விசாரித்தபோது, தான் வறுமையால் கஷ்டமுறுவதாகவும், சாப்பாட்டுக்கு வழியில்லாமல் இந்த வழியில் இறங்கியதாகக் கூறியதாகத் தெரிகின்றது.

### மாணவி தற்கொலை

சென்னை மருத்துவக் கல்லூரி மாணவி ... மாம்பலம் வார் தெருவைச் சேர்ந்த சுகுணா 20 வயது என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார். இவர் சென்னை மருத்துவக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவர். இந்த மரணத்துக்கான காரணம் தெரியவில்லை.

### வீடு கட்ட டில்லி உதவி

தமிழ்நாட்டில் வீட்டுவசதி திட்டங்களுக்காக மத்திய அரசு ரூ. 10 கோடி கொடுக்கவிருக்கிறது

இந்தத் தகவலை மத்திய அரசின் சுகாதார, வீட்டு வசதி அமைச்சர் திரு. கே. கே ஷா, நிருபர்களிடம் அறிவித்தார்.

### புஷ்பலதா வீட்டில் திருடியபெண்

நடிகை புஷ்பலதா வீட்டில் திருடிய பெண்ணுக்கு 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

முன்பு நடிகை புஷ்பலதா வீட்டில் வேலைக்காரியாக இருந்த சாந்தா என்பவர் புஷ்பலதாவின் தங்க நகைகள் ஒன்பதை எடுத்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டதாகப் புகார்செய்யப்பட்டிருந்தது.

## "முதலிடம் வழங்குக"

சித்தன்கேணி, ஞாயிறு

'தூர இடங்களில் உள்ள மாணவ, மாணவியருக்குக் கல்விபெற வசதிசெய்வதிலும் பார்க்க, வட்டுக்கோட்டைப் பகுதி பிள்ளைகளுக்கே தங்கள் கல்லூரியில் கல்வி பயில்வதற்கு முதலிடமும், வசதியும்செய்துதருக' என்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைக் கோரும் தீர்மானம், வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு. எஸ். நிற்சிங்கம் தலைமையில் நடைபெற்ற கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் வடமாநில கல்வி மா அதிகாரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## 'பரிசு'

சித்தன்கேணி, ஞாயிறு

எதிர்வரும் 15-ம் திகதி சித்தன்கேணி கலைநகர் நேருஜீ சனசமூக நிலையத்தினரின் 18-வது வெளியீடாக 'பரிசு' என்னும் சரித்திர நாடகம் வட்டுக்கோட்டையில் மேடையேறவிருக்கிறது. திரு. நா. சபாரத்தினம் (சங்கானைச் சபா) டைரக் செய்கிறார்.

தமிழில் அவர் சுமார் 2,000 கவிதைகளை இயற்றியுள்ளார் என்பதை கேட்டவுடன் தாம் ஆச்சரியமுற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மூன்று மணி நேரம் தவிப்பு
## பிரயாணி மயக்கம் போட்டு விழுந்தார்

புத்தூர், ஞாயிறு

நேற்றுமாலை 5 மணியிலிருந்து 8 மணிவரை யாழ்ப்பாணம் - பருத்தித்துறைக்கு பஸ் சேவை நடைபெருததால் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் பஸ் நிலையத்தில் அவஸ்தைப் பட்டார்கள்.

ஆஸ்பத்திரியிலும், அலுவலகங்களிலும், மற்றும் பல்வேறு இடங்களிலும் அலுவல்களை முடித்துவிட்டு வீடு திரும்ப வந்திருந்த ஆண்கள் பெண்கள் குழந்தைகள் எல்லோரும் இச்சேவைக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் சுமார் 3 மணி நேரம் வரை காத்து நின்றும் பஸ் சேவைக்கு விடப்படவில்லையாம்.

இதனால் பிரயாணிகள் பெரும் அதிருப்தியடைந்துள்ளதாவும் ஒரு பிரயாணி மயக்கம்போட்டு விழுந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

## இலவச புத்தகங்கள்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு பட்டணசபை ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசபுத்தகங்களை வழங்க ஏற்பாடுசெய்துவருகின்றது. இதற்கான விபரங்களைத் தருமாறு தலைமையாசிரியர்களை தலைவர் திரு.எம்.எஸ். வஸ்தியாம்பிள்ளை கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## இடமாற்றம் ரத்து

முல்லைத்தீவு, ஞாயிறு

வவனியா மாவட்டத்தை சேர்ந்த சில கிராமசேவையாளர்களை அரசாங்க அதிபர் திடீர் மாற்றத்துள்ளாக்கியதை வவனியா மாவட்ட ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம சேவையாளர் சங்கத்தின் கிளை பலமாக ஆட்சேபித்து உள்நாட்டமைச்சருக்குச் செய்த புகார்களைத் தொடர்ந்து இடமாற்றங்களை உடன் ரத்துச்செய்யும்படி உள்நாட்டமைச்சர் வவனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

... யும் சிண்டிகேட் சினிமா நட்சத்திரமான தாரகேசுவரியும் மற்ற சிண்டிகேட்காரர்களும் இன்று தாக்கிப் பேசுகிறார்கள். அவர்களுக்கு இந்திராவைத் தாக்குவதைத் தவிர வேறு லட்சியம் இல்லை.

சிண்டிகேட் சொன்னபடி கைப்பொம்மையாக இந்திரா ஆடாததால் தான் இப்படித் தாக்குகிறார்கள். காங்கிரஸ் பிளவுக்கே சிண்டிகேட்தான் காரணம்.

மொரார்ஜி சண்டித்தனம் செய்கிறார். அதற்கு இன்று சுதந்திராவும், ஜனசங்க மகாநாட்டுக்கு போய்விட்டு பம்பாய்க்குவந்துஅங்கிருந்து பணம் கொடுக்காமல் ரயில் ஏறி சென்னைக்கு வந்தனர் சிண்டிகேட் காரர்கள். பம்பாய் மாநாட்டுக்கு நாங்கள் 447 பிரதிநிதிகள் போயிருந்தோம்.

இவர்கள் ஆமதாபாத்தில் எண்ணிப் பதினொரு பேர் இருந்தார்கள். மார்தட்டிப் பேச அவர்களுக்கு தைரியமில்லை.

இந்திராவை நீக்கினல் நாட்டில் குழப்பம் தான் மிஞ்சும்.

இவ்வாறு பக்தவத்சலம் கூறினார்.

# சாவகச்சேரி டிறிபேர்க்கில் சிங்கள ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த 15 வருடங்களுக்கு பின்னர் சாவகச்சேரி டிறிபேர்கல்லூரியில்இம்மாதம் முதல் சிங்கள ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் நீண்ட நாட்களாக பெற்ரோர்கள் பலர் சிங்கள ஆசிரியர் ஒருவரை நியமிக்கும்படி விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே இவ்வாசிரியர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

6ம் வகுப்புவரை தற்போது இங்கு சிங்களம் போதிக்கப்பட்டு வருகிறது. தங்கள் பிள்ளைகளுக்கு சிங்களம் போதிக்கும்படி பல பெற்ரோர்கள் அதிபரைக் கேட்டுகொண்டுள்ளனர்.

பிள்ளைகளுக்கு சிங்களம்படிப்பிக்க விரும்பும் பெற்ரோர்கள் உடனே கல்லூரி அதிபருக்கு அறிவிக்கும்படியும், வகுப்புநேர அட்டவணைதயாரிக்கு முன்னர் காலதாமதமின்றி அதிபருக்கு அறிவிக்கும்படியும் மொழிப்பிரச்னையால் இளைப்பாறிய அரசாங்க ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதுவரைகாலமும் இங்குள்ள தனிப்பட்ட நிலையங்களுல்மாதம் 15ரூபாகொடுத்து பிள்ளைகள் சிங்களம் படித்துவந்ததாகவும் இப்பொழுது கல்லூரியில்பிள்ளைகளிக்கு இலவசமாக சிங்களம் படிக்க அரசாங்கம் வசதிசெய்து கொடுத்திருப்பதாகவும் இதுஏழைப் பெற்ரோர்களுக்கும் நன்மையளித்திருப்பதாகவும் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

சாவகச்சேரி பகுதியிலுள்ள மற்றும் பாடசாலைகளிலும் சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால் கிராமப்புற ஏழைப்பிள்ளைகள்பயன் அடைவார்கள் என்றுமவர் மேலும் தெரிவித்தார்.

1955ம் ஆண்டு டிசம்பர் வரை இக்கல்லூரியில் சிங்களம் ஒரு பாடமாக போதிக்கப்பட்டுவந்தது தனிச் சிங்களச்சட்டம் ஆட்சிமன்றத்தில் நிறை வேற்றப்பட்டதைத் தொடர்ந்து இப் பாடசாலையில் சிங்களம் போதிப்பது நிறுத்தப்பட்டது. ——

புதுவருடத்திற்கு

## 4 கோடி யார் துணி வகைகள்

கோட்டை, ஞாயிறு

எதிர்வரும் சிங்கள-தமிழ் புதுவருடத்தை யொட்டி 'சலுசலா' 4 கோடி யார் துணிவகைகளை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

ஹங்கேரி, செக்கோஸ்லவாக்கியா, சீன, ரஷ்யா, ரூமானியா ஆகிய நாடுகளிலிருந்து மேற்படி துணிவகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. பெப்ரவரி இறுதியில் இத்துணிகள் இறக்குமதி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ——

## திருமலையில் உள்ளூராட்சி வாரம்

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ளூராட்சிவாரம் விழா அடுத்தமாதம்8ம்திகதி முதல் 14-ம்திகதி வரை கொண்டாடப்பட விருக்கிறது.

மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட விருக்கும் இவ் விழாவின் ஞாபகார்த்தமாக "உள்ளூராட்சி விழா மலர்" ஒன்றும் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இருளைப் போக்குவதற்காகத்தான் அறிவு பயன்படவேண்டும். இருளை வளர்ப்பதற்காக அல்ல, தெய்வீக ஒளி இல்லாத கல்வி மனத் தெளிவை ஏற்படுத்திவிடாது.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 28-ந் திகதி (12-1-70)


## நல்ல அறிகுறி

யாழ்ப்பாண மாநகர சபை நேற்று இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அளித்த வரவேற்பில் இடம் பெற்ற முக்கிய அம்சம் இலங்கையின் எதிர்காலம்பற்றி நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது. இந்த நம்பிக்கையான வாய்ப்பை உருவாக்கிய யாழ்ப்பாண நகர மேயர் பாராட்டுக்குரியவர். இந்தியக் குடியரசுத் தலைவருக்கு யாழ்ப்பாண மாநகரசபையின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரப் பத்திரத்தை மேயர் திரு. சி நாகராஜா தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டுமல்லாது சிங்களத்திலும் வாசித்து அளித்ததைத்தான் குறிப்பிடுகிறோம்.

வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கின்றனர். நமது நாட்டின் பிரதம மந்திரிகள் சிலரும் மற்றும் அமைச்சர்கள் சிலரும்யாழ்ப்பாண நகருக்கு வருகைதந்திருக்கின்றனர். இவர்களில் பலருக்கும் யாழ்ப்பாணநகர மக்கள் சார்பாக மாநகர சபை பொது வரவேற்பளித்திருக்கிறது அந்த வரவேற்புகளின்போதெல்லாம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரப் பத்திரங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலுமே வாசித்தளிக்கப்பட்டன. யாழ்ப்பாணநகரின் பெருமையையும் தமிழ்ப் பெருமக்கள் பலதுறைகளிலும் ஆற்றிய பெரும் பணிகள் பற்றியெல்லாம் அந்த வரவேற்புபசாரப் பத்திரங்களில் குறிப்பிடப்படுவதுண்டு பிரதமமந்திரிகளுக்கும்அமைச்சர்களுக்கும் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரங்களிலும் கூட யாழ்ப்பாணத்தினதும் தமிழ் மக்களினதும், அவர்களது மொழியினதும் சிறப்பு பாரம்பரியம் பற்றியெல்லாம்குறிப்பிடப்படுவதுடன் அவர்களின்

இந்த நாட்டின் உத்தியோக மொழி என்பதற்காகவும் அதைத் தமிழர்கள் இன்னும் உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களென்பதற்காகவும் தமிழர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல்ஒரு தலைப்பட்சமாக சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதென்பதற்காகவும் இதுவரை எந்த வரவேற்புபசார வைபவத்திலும் சிங்களத்துக்கு இடமளிக்கப்படவில்லையென்று சிலர் கூறலாம். சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்காவிட்டால் தாமாக இப்பகுதி மக்கள் சிங்களத்தை விரும்பிப் படித்ததுபோல இங்கு வரவேற்புபசாரங்களிலும் சிங்களம் இடம்பெற்று வந்திருக்கலாம்.

சிங்களம் மட்டும் சட்டமும் தமிழ்மொழிச் சட்டமும் நிறைவேற்றப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. மொழிப் பிரச்னையால் நாட்டின் தேசிய ஐக்கியம் குலைந்து நாட்டின் முன்னேற்றமும் தடைப்பட்டதை பெரும்பான்மைச் சமூகத்தினர் இன்று பெரிதும் உணர்ந்து விட்டனர். மீண்டும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டவும் சிறுபான்மைச் சமூகத்தினருடன் நட்புறவை வளர்க்கவும் அவர்கள் முயற்சி செய்கின்றனர். இச் சமயத்தில் சிறுபான்மையினரும் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

சிங்களமொழி மீதோ சிங்கள மக்கள் மீதோ தமிழ் மக்களுக்கு வெறுப்பில்லையென்பதை பலரும் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர். தமிழ் மொழியும் இந்தநாட்டின் ஒரு தேசிய மொழியென்றும் அதற்கு உரிய இடம் அளிக்கப்படவேண்டுமென்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும். ஆனால் இந்த விருப்பத்தை சிங்கள மக்க

# சாதாரண மனிதனை பிரதிபலிக்கும் ஜனாதிபதி

## யாழ். நகர வரவேற்பில் புகழ்மாலை

யாழ்ப்பாணம், திங்கள் பாரதக் குடியரசுத் தலைவர் திரு வராககிரி வெங்கடகிரி அவர்களுக்கு நேற்று யாழ்ப்பாணம் மாநகரசபை அளித்த வரவேற்பின் போது அளிக்கப்பட்ட வரவேற்பு மடலில் திரு கிரி ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது சாதாரண மனிதனின் வெற்றியைக் குறிப்பதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகர மேயர் திரு சி நாகராசா தலைமையில் மாநகர உறுப்பினர்களின் சார்பில் இந்த மடல் கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மேயரும், உறுப்பினர்களுமாகிய நாங்கள் மாட்சிமை தங்கிய தங்களை எமது நகருக்கு பரிவுடன் வரவேற்பதில் பேருவகை அடைகிறோம். இலங்கையின் வரலாற்றுப் பெருமை மிக்க தமிழர்களின் தலைநகரான யாழ்ப்பாணம், ஸ்ரீ இராம சகாப்தம் தொடக்கம் தங்கள் நாட்டுடன் தொடர்புடையது. அறஹற்மகிந்தனதும், சங்கமித்திரையினதும் வருகையால் எமது நாடு புனிதமடைந்தது. புத்தபிரானது அரிய போதனை இலங்கை மக்களில் பெரும்பாலோரது வாழ்வுக்கு வழி வகுக்கிறது. இலங்கைத் தமிழர்கள் இந்தியத்தமிழ் நாட்டு மக்களுடன் மொழி, கலாச்சார, சமய பந்தங்களால் உறவு பூண்டுள்ளார்கள். பல்வேறுபட்ட துறைகளில் தமிழ் மொழியையும் தமிழ்க்கலாசாரத்தையும் செழிப்புறச் செய்த ஞானிகளையும், கவிஞர்களையும், அறிஞர்களையும் யாழ்ப்பாணம் ஈன்றுள்ளது. சைவசித்தாந்த மறுமலர்ச்சியாளரும், தமிழ் வசன நடையின் தந்தையுமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும், திராவிட மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற மொழியியல் வல்லுனரான வண. ஞானப்பிரகாச அடிகளாரும் தோன்றியது இந்நகரே. தலைசிறந்த இராஜதந்திரிகளான சர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் அவரது சகோதரர் சர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களும் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமன்றி இலங்கை முழுமைக்கும் பெருமையையும், புகழையும் தேடித் தந்தனர்.

மாபெரும் இந்தியக் கலைவிமர்சகரும் ஆராய்ச்சியாளரும், கீழைத்தேசக் கலைகள்—கைப்பணிகளில் திறனாய்வு படைத்தவருமாகிய கலாயோகி ஆனந்தக்குமாரசாமி அவர்கள் உலக கலாச்சாரத்திற்கு யாழ்ப்பாணம் அருளிய கொடையாகும்.

புதுயுக இந்தியாவின் அருள்ஞான செல்வரான ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தா அவர்களையும், இந்திய தேசத் தந்தையாகிய மகாத்மா காந்தியடிகளையும், நவயுக இந்தியாவின் சிற்பியான ஸ்ரீ ஜவஹர்லால்நேரு அவர்களையும், முதுபெரும் அரசியல் ஞானி ஸ்ரீ சி இராஜகோபாலாச்சாரியார் அவர்களையும். ஆசியாவின் ஆஸ்தானக்கவியாகிய இரவீந்திரநாத் தாகூர் அவர்களையும் பாபு ராஜேந்திரப்பிரசாத் அவர்களையும். கலாநிதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களையும் கடந்தகாலத்தில் எமது மாநகர் வரவேற்கும் பாக்கியம் பெற்றது. இன்று மாட்சிமை தங்கிய தங்களை எமது நகருக்கு வரவேற்கும் பெரும் பேறு பெற்றுள்ளோம்.

மாட்சிமை தங்கிய தாங்கள் எமது நாட்டிற்கோ அல்லது இந்த நகரிற்கோ புதியவர் அல்லர். தாங்கள் முன்னர் எமது நாட்டில் இருந்தமையும், எமது நலனில் அழியாத ஆழ்ந்த அக்கறை கொண்டமையும் பெருமதிப்புடன் மனத்திலிருத்தி வருகிறோம். சிறப்பு மிகு நிகழ்ச்சிகள் நிரம்பிய ஐம்பதாண்டு காலத்திற்கு மேலாகத் தங்கள் நாட்டிற்கு விசுவாசத்துடன் தாங்கள் ஆற்றிய பெருமை மிகு சேவையின் பயனாக இந்தியக் குடியரசின் மகோன்னத தலைவர் பதவியை தாங்கள் அடைந்தீர்கள். பூரண சுயராச்சியத்தான போராட்டத்தில் தோல்விகளால் துவண்டு போகாத விடுதலை வீரராக தொழிற்சங்க இயக்கத்தில் தீரமிகு தலைவராக தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடி வாகை பல குடி மாகாண மத்திய சட்ட சபைகளில் கீர்த்திபெற்ற நாடாளுமன்ற உறுப்பினராக. அப்பழுக்கற்ற நேர்மைக்கும், உறுதியான தனித்துவத்திற்கும் பேர்போன அமைச்சராக, உத்வேகப் போக்குடைய கவர்னராக பதவியைத் துணிவுடன் துறந்த உபஜனாதிபதியாகவும் இருந்த தாங்கள் இந்தியக் குடியரசின் மாட்சிமை தங்கிய தலைவர் பதவியை அடைந்திருக்கிறீர்கள்.

மாட்சிமை தங்கிய தாங்கள் இந்தியக் குடியரசின் தலைவர்பீடத்தில் அமர்த்தப்பட்டமை சாதாரண மனிதனது வெற்றியாகும். பாரத மக்களின் ஜனநாயக பாரம்பரியத்தின் பிரதிபலிப்புமாகும்.

தங்கள் நிதார்த்தமான பேச்சும், சீரிய பண்பும், தலைமை வகிப்பதற்குரிய குணஇயல்புகளும், செயல் திறனும், மனோதிடமும், உயர்ந்த குறிக்கோள்களை அடைவதில் காட்டிய தீவிரமும், வழுவாத சத்தியநெறியும், இந்திய மக்களது இதயங்களைக் கவர்ந்து தலைசிறந்த தேசத் தலைவர்கள் வரிசையில் நன்மதிப்புக்குரிய இடத்தைத் தங்களுக்குப் பெற்றுத் தந்துள்ளது.

இந்தியக் குடியரசின் தலைவராகத் தொடர்ந்து நீங்கள் உன்னத சேவைகளைப் புரிய இறைவன் தேகசுகத்தையும், வலிமையையும் தரவேண்டுமென, இம்மாநகரின் மேயரும் உறுப்பினர்களுமாகிய நாம் பிரார்த்திக்கின்றோம்.

## ஜயராமன் எழுதுவது..

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் இம்மூன்று இடங்களிலும் பாரத ஜனாதிபதி கிரி அவர்களுக்கு நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தைப் பார்த்த ஓர் அதிகாரி, யாழ்ப்பாண வரவேற்பே மிகவும் சிறப்பாக இருந்ததாகத் தெரிவித்தார். இதைக் கேட்க மிக மிகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமிருந்தது.

தலைநகரான கொழும்பில் கிரி தம்பதிகள் இறங்கியதும், வெயில் 'சுள்' என்று அடித்ததாயும், ஸ்ரீமதி கிரி குளிர்ச்சிக் கண்ணாடி போட்டுக் கொண்டு 'அம்மாடி' என்று காரில் அமர்ந்தாராம். அவ்வளவு வெயில் அங்கே!

ஆனால்யாழ்ப்பாணத்திலே மேகங்கள் குடைபிடிக்க, குளிர் காற்று வீச, சீதோஷண நிலைமை பெங்களூர் மாதிரி குளுகுளு என்றிருந்தது. காலை முதல் மாலை வரை இடையில் சற்று நேரம் தவிர, இப்படியே சுகமான சீதோஷணமிருந்து ஜனாதிபதி கிரி தம்பதிகளுக்கு இதம் செய்தது. முன்னர் ராஜேந்திரபிரசாத் வந்தபோது இப்படித்தான் கொழும்பில் பெருமழை பெய்து குழப்பிவிட்டிருக்க இங்கு யாழ்ப்பாணத்திலே பூமாரி சற்றே பெய்து, பூமியெல்லாம் குளிர்வித்தது. நேற்றுக்காலை பலாலி வீதியிலே சற்று மழை பெய்தது. தெருவை சுத்தம் செய்து குளிர்வித்தது. இது தற்செயலா? அல்லது இறைவன் திருவருளா? அவனன்றி ஓரணுவும் அசையாதென்று நம்பிக்கை கொண்டவர்கள் இதுவும் கடவுள் செயலே என்றுதான் கொள்வர்.

0 0 0

பலாலிக்கு விமானம் 9-55க்குத்தான் வந்தது. விமானநிலையத்துக்குப் பக்கத்திலுள்ள புதியஷெட்டை விசேஷமாக அலங்கரித்து அதன் முன்புறம் அழகான 'சிகரம்' அமைத்திருந்தார்கள். உள்ளே ஆண்களும் பெண்களுமாகப் பிரமுகர்கள் பலரும் காத்திருந்தனர்.

பொலிஸ் பாண்ட் 'ஜனமணகண' 'நமோ நமோ மாதா' என்ற முதல் இரு அடிகளை மட்டும் முழங்கியது. நாதசுரத்தில் 'ரகுபதி ராகவ' வாசித்ததை சிறப்பாக ஸ்ரீமதி கிரி ரஸித்தார். பணமே வேண்டாமென்று விட்டாராம், மாலை கொடுத்தவர். இலங்கை-இந்தியர் சங்கத்தின் சார்பாக திரு. வேங்கடசாமி தம்பதிகள் கிரி தம்பதிகளுக்கு மாலைகள் அணிவித்தார். வேறு சிலரும் மாலை போட்டு மரியாதை தெரிவித்தார்கள்.

வயது 60க்கு மேல் ஆகியும் ஜனாதிபதி சுறுசுறுப்பாகவே இருக்கிறார். ஸ்ரீமதி தான் சற்றே தளர்ந்துள்ளார். பதினாறும் பெற்ற மகராசி அல்லவா?

0 0 0

விமான நிலையத்திலிருந்து நகரமண்டபத்தில் நடைபெற்ற மாநகரசபை வரவேற்புக்கு வரமுடியுமோ என்று சந்தேகமாக இருந்தது. ஜனாதிபதியின் கார் முன்னே வெகுதூரம் சென்றுவிட்டது. என்றாலும் முட்டாசுக்கடை மூலையில், இலங்கை - இந்திய சங்கத்தார் அமைத்திருந்த சிகரத்தின் சமீபத்தில் ஜனாதிபதியின் ஊர்வலம் வருவதற்குள், வேறு வழியாக வந்து அதில் சேர்ந்துகொள்ள முடிந்தது. பல இடங்களிலும் தோரணங்களை இருபுறமும் கட்டி, மக்கள் அதிகமாகத்திரண்டு நின்று தரிசித்தார்கள்

மேயர் நாகராஜா, முதலில் தமிழில் வரவேற்புப் பத்திரம் படித்துவிட்டு, சிங்களத்திலே படிக்க ஆரம்பித்ததும். பலரும் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தனர். கடைசியில் ஆங்கிலத்திலும் படித்தார். நாடெங்கும் இம்மூன்று மொழிகளும் கட்டாயமாக அமுலுக்கு வந்தால், மொழிப்பிரச்னைக்கு இடமிருக்குமா? நாட்டு ஒற்றுமையும் எவ்வளவு பலப்படும்! யாழ்ப்பாண மாநகரசபை மற்றவர்களுக்கு மேலான வழி காட்டியுள்ளது பலே பலே!

0 0 0

நல்லூருக்கு கிரி தம்பதிகள் சென்று தரிசிப்பதென்று நேற்று காலை அறிந்ததும் மகிழ்ச்சியாக இருந்தது ஆனால் மத்தியானம் 2 மணிக்கு கோவில் திறக்கக் கூடாதென்ற காரணத்தால் அவர்கள் அங்கு செல்ல முடியாமல் போய்விட்டதாம்.

யாழ்ப்பாணம் வந்ததுமே முதல் காரியமாக ஆலய தரிசனத்துக்கு ஏற்பாடு செய்திருக்க முடியாதா? இனி இப்படி தவறு நடவாமல் இருக்க இது நல்லதோர்

## பாமரரின் பாதுகாவலன் டாக்டர் பாலசிங்கம்

மானிப்பாயில் கிறீன் ஆஸ்பத்திரி மருத்துவ கூடத்தில் சனம் நிரம்பியுள்ளது. அங்கு நோயுடன் வைத்தியம் பெறக் காத்து நிற்பவர்களைப் பதிவாளர் தன்

பாலசிங்கம் படம் பிடித்து, சத்திர சிகிச்சை, வைத்தியம் முதலிய துறைகளில் நிரம்பிய அனுபவம் பெற்றவர்.

ஒரு ... ஆஸ்பத்திரியில்

## ஏமாற்ற முனைந்தவரே ஏமாந்து போனாராம்

### கோர்ட்டில் வெளியான தகவல்

கோட்டை, ஞாயிறு வருமான வரிச் சங்கடத்திலிருந்து விடுவிப்பதாகக் கூறி தோட்ட அப்போதிக்கரி ஒருவரை ஏமாற்ற முனைந்த மற்றொருவர்

சங்கடத்தில் மாட்டவிருப்பதாகவும் இதனைச் சமாளிப்பதற்கு உதவும் வகையில் 'டைம்ஸ்' கட்டடத்திற்கருகில் சந்திக்கும்படியும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினதும், அவர்களது மொழியினதும் சிறப்பு பாரம்பரியம் பற்றியெல்லாம்குறிப்பிடப்படுவதுடன் அவர்களின் குறைகளையும் எடுத்துக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் கோரப்படுவதுண்டு.

இவையாவும் தமிழிலும் ஆங்கிலத்திலுமே வாசித்தளிக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டின் பெரும்பான்மையினரின் மொழியான சிங்களத்தில் வரவேற்புபசாரப்பத்திரம் எதுவும் இதுவரை வாசித்தளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சிங்களம் [illegible] இடம் அளிக்கப்படவேண்டுமென்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும். ஆனால்இந்த விருப்பத்தை சிங்கள மக்களுக்கு புரியக்கூடிய மொழியில் இதுவரை யாரும் எடுத்துக்கூறியதாகத் தெரியவில்லை.

நேற்று யாழ்ப்பாண நகர மேயர் சிங்களத்திலும் வரவேற்புபசாரப் பத்திரத்தை வாசித்ததன் மூலம் தமிழ் மக்களின் பெருந்தன்மையை மட்டுமல்ல தமிழ் மக்களின் மனோநிலையையும் உணர்த்தியிருக்கிறார்,

தில் சனம் நிரம்பியுள்ளது. அங்கு நோயுடன் வைத்தியம் பெறக் காத்து நிற்பவர்களைப் பதிவாளர் தன் புத்தகத்தில் பதிந்துகொள்கிறார். காய்ச்சல்காரரர், காயம் பட்டோர், கர்ப்பிணிகள் இப்படியான பல்வேறு நோயாளர்களையும், ''யாருக்கு காட்ட விரும்புகிறீர்கள்'' என வினவுகிறார் வரவேற்பு பதிவாளர் ''டாக்டர் பாலசிங்கம்'' இது நோயாளரின் பதில்.

பலரதும் அபிமானத்தைப் பெற்ற இந்த பாலசிங்கம் யார் எனக் கேட்டால் அவர் கதையில் ஒரு சரித்திரமே எழுதிவிடலாம். மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் டாக்டராக நேற்று வரை பணி புரிந்தவர் தான் இந்த ''டாக்டர் பாலசிங்கம்.''

படிப்பால், செல்வத்தால் பதவி பெற்றுவிடலாம், மக்கள் மனதில் நிலைத்து நிற்கலாம் என்ற சாதாரண மனித நினைவுக்குச் சவால் விடுவதுபோல பண்பாலும் ஒழுக்கத்தாலும் மக்கள் மனதில் நிலைக்க முடியும் என நிரூபித்துக் காட்டிய டாக்டர் பாலசிங்கம், சுமார் அரை நூற்றுண்டு காலம் தமது வைத்திய சேவையை கிறீன் வைத்தியசாலையில் ஆற்றிவிட்டு ஓய்வு எடுத்துள்ளார்.

டாக்டர் பாலசிங்கம் மட்டுமல்ல அவர் குடும்பமே வைத்தித்துறையில் ஈடுபட்டுச் சேவை செய்யும் ''உயர் குடும்பம்'' எனலாம். படிப்பால், பண்பால் உயர்ந்துள்ள பாலசிங்கம் குடும்பத்தின் சேவையான முக்காற் பங்கும் பாமரருக்கும் ஏழைகளுக்குமே கிடைத்துவந்தது.

வறியவர்கள் வந்தால் அவர்களை வரவேற்று, விசாரித்து வைத்தியம் செய்து குணமாக்கி அனுப்பும் குணம் கொண்ட பாலசிங்கம் ''பாமரரின் பாலசிங்கம்'' என்றும் ''ஏழைகளின் தோழன்'' என்றும் பொதுமக்களால் புகழப்படுகின்றார்.

1924-ம் ஆண்டு முதல் மானிப்பாய் கிறீன் ஆஸ்பத்திரியில் வில்லியம் ஜே. ஜேம்சன் ஐயர் அவர்களால் டாக்டர் வை. பாலசிங்கம் சேவையில் அமர்த்தப்பட்டார் இவரைத் தொடர்ந்து வந்த நிர்வாக அதிபர்களான திருவாளர்கள் சாக்கோ, கென்னடி, வீவல், அசரய்யா, குக், ஜே. எல். அமரசிங்கம், எல். ஆர். ஜே. வாட்சன் ஆகியோரின் கீழ் வேலை செய்த டாக்டர் களில் நிரம்பிய அனுபவம் பெற்றவர்.

ஒரு கால கட்டத்தில் அப்படி ஆஸ்பத்திரியில் புகழ் பெற்ற டாக்டர்கள் எவரும் இல்லாத இடத்து தனித்து நின்று பணி ஆற்றி ஆஸ்பத்திரிக்குப் பெருமை தேடித் தந்தவர் பாலசிங்கம். சுருங்கக் கூறின் டாக்டரின் வாழ்வின் பெரும் பகுதி ஆஸ்பத்திரியிலேயே கழிந்தது. மானிப்பாய் ஆஸ்பத்திரி புகழ் வெற பாலசிங்கம் தான் காரணம் என்று கூறினாலும் பொருந்தும். திரு. பாலசிங்கம் ஏழைகளின் தோழனாக, பாமரரின் பாதுகாவலனாக இருந்து 46 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய பின் இப்பொழுது சேவையினின்றும் இளைப்பாறியுள்ளார். அன்னார் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து வைத்தியத்துறைக்கு சேவையாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவராக.

திலிருந்து விடுவிப்பதாகக் கூறி தோட்ட அப்போதிக்கரி ஒருவரை ஏமாற்ற முனைந்த மற்றொருவர் பொலிசாரிடம் வசமாக மாட்டிக்கொண்டதாகக் கோர்ட்டில் விவாதிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த பிராங்க் ஹிலரி லூசியன் குணவர்த்தன என்பவர் அல்வத்துறைத் தோட்டத்து அப்போதிக்கரி திரு. டி. எஸ். இளையபெருமா என்பவரை ஏமாற்ற முனைந்ததாகவும் இளையபெருமாவின் வருமான வரிக்கணக்குகளைக் கவனிக்கும் சப்ஜெக்றிளார்க் ஆர். பி. பெரேரா தாம் தான் என்று கூறி மோசடி செய்ய முனைந்ததாகவும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டுப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரியான அலரிக் விவியன் தோமஸ் பீரிஸ் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தவழக்கில் முடிக்குரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஆர். பி. பெரேரா என்பரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் ஒன்று பதிவுத்தபாலில் திரு. இளையபெருமாவுக்குக் கிடைத்தது. இளையபெருமா வருமானவரி சம்பந்தமாக பதற்கு உதவும் வகையில் 'டைம்ஸ்' கட்டடத்திற்கருகில் சந்திக்கும்படியும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இளையபெருமா இந்தககடிதம் சம்பந்தமாக சந்தேகமுற்று இரகசியப் பொலிசாருக்கு அறிவித்தார் குறிக்கப்பட்ட தினத்தில் சம்பந்தப்பட்டவரை சந்திக்கும்படி பொலிசார் கூறினார்கள். குறித்ததினத்தில் இளையபெருமா எதிரியைச் சந்தித்தார். அடுத்தநாள் பணத்துடன் வருவதாகவும் எதிரி சம்பந்தப்பட்ட பைலுடன் சந்திப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

அடுத்தநாள் இன்ஸ்பெக்டர் சுமணசேகராவும், கான்ஸ்டபிள் அந்தோனிப்பிள்ளையும் குறித்த இடத்தில் மாறுவேடத்தில் இருந்தனர். இளையபெருமா எதிரியைச் சந்தித்து 200 ரூபாயைக் கொடுத்து பைலை வாங்கினார். எதிரி தாம் கொடுத்த பைலை மீண்டும் பறித்துக்கொண்டார். அதே சமயம் கான்ஸ்டபிள் அந்தோனிப்பிள்ளை எதிரியின் மீது பாய்ந்து அவரை மடக்கிப்பிடித்து கைதுசெய்தார்.

மேல் விசாரணை மார்ச் 16-ம் திகதிக்குப் பிற்போடப்பட்டது.

மாதா' என்ற முதல் இரு அடிகளை மட்டும் முழங்கியது. நாதசுரத்தில் 'ரகுபதி ராகவ' வாசித்ததை சிறப்பாக ஸ்ரீமதி கிரி ரஸித்தார். ஸ்ரீமதி கிரி ஜரிகை போட்ட பச்சைப் பட்டுப் புடவையும் கழுத்தில் தங்கச்சங்கிலி கையில் தங்க வளையல்கள் காதில் தோடு, நெற்றியில் சிவப்புக் குங்குமம் இவை அணிந்து பெரிய சுமங்கலியாகக் காட்சி அளித்தார்.

விமானத்திலிருந்து படிவழியே ஸ்ரீமதி கிரி அவர்கள் பாதி இறங்குகையில் தேசியகீதத்தைப் பாண்டில் முழங்கவே அவர் அப்படியே நின்று கீதம் முடிந்தபின்பே கீழே இறங்கி வந்தார். கிரி தம்பதிகளைக் கண்டதும் அங்கு காத்திருந்த மக்களெல்லாம் மகிழ்ச்சியுடன் கைதட்டி அவர்களை வரவேற்றனர். சிலரை கிரி கைகூப்பி மரியாதை தெரிவித்தார். சிலருடன் கைகுலுக்கினார்.

மல்லாகம் பட்டினசபைத் தலைவர்பொன்னம்பலம் விதவித நிறமுள்ள அழகான ரோஜாப் பூமாலையை கிரிக்கு அணிவித்தார். ஒருரோஜாப்பூ 20 சதமாம். ஆனால் கிரிக்கு என்றதும் அம்மாலைக்குப் முதல் காரியமாக ஆலய தரிசனத்துக்கு ஏற்பாடு செய்திருக்க முடியாதா? இனி இப்படி தவறு நடவாமல் இருக்க இது நல்லதோர் பாடமாகும்.

கோட்டையிலே 'கிங்ஸ் ஹவுஸில்' கிரி தம்பதிகளும் அவர்களுடன் வந்த சுமார் 50 பேர்களும் மதிய விருந்துண்டனர். தாமோதர விலாஸ் காரர்கள் செய்திருந்த ஸ்பெஷல் சைவச் சாப்பாட்டை கிரி தம்பதிகள் ருசித்துச் சாப்பிட்டுப் பாராட்டியதாகத் தெரிகிறது. அவருடன் 22 வருஷமாக இருக்கும் ஆறுமுகம் என்ற திருநெல்வேலி வாலிபரே இதைத் தெரிவித்தார் அவ்வாலிபருக்கு கிரி தம்பதிகளே சென்னையில் விவாகம் செய்து வைத்தனராம்.

0 0 0

சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்த செந்தேன், முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு, பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி, அந்திப்பிறையணிந்தாடும் ஐயாதன் அடித்தலமே.

— அப்பர் அடிகள்.

# சமூக குறைபாடுகள் பற்றி
## அமைச்சர்கள் ஆராய்கின்றனர்

மாவிட்டபுரம், ஞாயிறு

''சமூகக் குறைபாடுகள் பற்றிய குறிப்புகள் உரிய நடவடிக்கைக்காக, பொருத்தமான அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது பிரதமர் சம்பந்தப்பட்ட தலைப்புகள் பற்றிய அமைச்சர்களின் அறிக்கைகளை எதிர்பார்த்திருக்கிறார்.''

இவ்வாறு பிரதமர் திரு. டட்லி சேனநாயககாவின் காரியதரிசி, சிறுபான்மைத் தமிழர் மகாசபைச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்

அண்மையில் சிறுபான்மைத் தமிழர் சபைகளின் பிரதிநிதிகள் பிரதமர் டட்லி சேனநாயகாவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் பிரதமரிடம் சிறுபான்மைத் தமிழர் மகாசபை சமர்ப்பித்த கடிதம் ஒன்றுக்குப் பதிலளித்து அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே பிரதமரின் காரியதரிசி இப்படித் தெரிவித்துள்ளார்

அக்கடிதம் மேலும் தெரிவிப்பதாவது:

''மகாசபை சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை 27-9-69ல் பிரதமர் பரிசீலனைசெய்தார். அம்மாநாட்டில் ஐக்கிய முன்னணி சார்பிலும், உங்கள் மகாசபையின் சார்பிலும் பிரதிநிதிகள் பிரதமரைச் சந்தித்தனர். இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம் ஒன்றும் விரைவில் தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

சமூகக் குறைபாட்டுச் சட்டத் திருத்தம் பற்றி நீங்கள் மாநாட்டில் பிரதமருக்கு விடுத்த வேண்டுகோள் பற்றி அரசியல் அதிகாரிகள் தற்பொழுது, இது பற்றிய இந்தியச் சட்டத்தினை ஆராய்ந்து வருகிறார்கள். இந்தியச் சட்டத்தினை ஆதாரமாகக் கொண்டு எமது சமூகக் குறைபாட்டுச் சட்டத் திருத்தம் அமைய முடியுமா என்று ஆராயப்பட்டுவருகிறது. மேலே குறிப்பிட்டதுபோல அமைச்சர்களிடமிருந்து அறிக்கைகள் யாவும் பெற்றவுடன் மீண்டும் கடிதம் எழுதுவேன்.''

## புதுமையான பந்தய கார்

லண்டன், ஜன. 10

பிரிட்டனில் உருவாக்கப்பட்ட புதுமையான சிறிய பந்தய கார் ஒன்று அண்மையில் லண்டனில்நடைபெறற மோட்டார் வாகன கண்காட்சி ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டது. முட்டை போன்ற உருவ அமைப்பில் கண்ணாடி நூலிழையால் செய்யப்பட்ட இந்த சிறிய கார். மணிக்கு 60 மைல் வேகத்தில் செல்லக்கூடியது,

இதன் எடை 224 ருத்தல் மட்டும்தான். சிறுவர்களும் பெரியவர்களும் காரோட்டி பழகுவதற்கு சிறந்த சாதனமாக இது கருத்ப்படுகிறது. இதனை வீட்டில் விளையாட்டுக் காராகவும் பாவிக்கலாம். தேவை ஏற்படின் இதில் வெளியிடங்களுக்கும் பிரயாணம் செய்யலால். இதில் ஒருஆசனம் மட்டுமே உண்டு. காரோட்ட ஆர்வம் கொண்டிருக்கும் சிறுவர்களிடையே இதற்கு பெரும் வரவேற்பிருக்கும்.

## சுருட்டுத் தொழிலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்க நிர்வாகசபைக் கூட்டம்நேற்றுமாலை தாவடி காரியாலயத்தில் திரு. க. சோமஸ்கந்தன் தலைமையில் கூடியது.

செயலாளர் திரு. சி. முதலியார் பேசுகையில் கூறியதாவது:- ''1000 சுருட்டுகளுக்கு 15 ரூபாய் சம்பளம் தருவதாக வேலைக்கு அமர்த்தி ஒரு மாதகாலமாகி வேலை செய்தும் இன்னும் அதன்படி கணக்கு தீர்க்கப்படவில்லை. ஆகையால் தைப் பொங்கலுக்கு கணக்கு தீர்க்கும் பொழுது 15 ரூபாவுக்கு குறைத்தால் ஒரு தொழிலாளியும் சம்பளம் ஏற்கப்படாது. சில முதலாளிமார்கள் பொங்கல் கணக்கை அட்வான்ஸ்கொடுக்கும் திட்டத்தை கையாளப்போவதாக அறிகிறோம். இதற்கு தொழிலாளர்கள் இடம் கொடாது கணக்கை 15 ரூபாய் படி சம்பளம் வேண்ட வேண்டும்.

சட்டப்படி சம்பளம் மாதம் இரு முறை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று வரையப்பட்டுள்ளதை தொழிலாளர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.''

திரு. க. தங்கராசா, வ. ஆறுமுகம், அ. இரத்தினசபாபதி. சி தம்பிராசா உட்பட பலர் பேசினர்.

# 'தூர கிழக்கில் நல்ல நெல் விளைச்சல்'

லண்டன் ஜன. 11

ஒருசில நாடுகளில் காலநிலை மோசமாக இருந்த போதும் தூரகிழக்கில் 1969-70-ம் ஆண்டில் நெல் விளைச்சல் தொடர்ந்து திருப்திகரமான முறையில் முன்னேற்றம் கண்டுவருகிறது' சமீபத்தில் லண்டனில், சாம்ராஜ்ய தலைமைக் காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட அரிசி அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கபட்டிருகிறது.

தூரகிழக்கு பிராந்திய நாடுகள் சிலவற்றில் சிறந்த நெல் விளைச்சல்ஏற்பட்டிருப்பதாயும், இதனால் உலக உணவு பயிர்ச் செய்கையில் பெரும் முன்னேற்றம் காண்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாயும் இந்தஅறிக்கை கூறுகிறது:

இக்கால கட்டத்தில் இறக்குமதி தேவை ஓரளவு குறைந்திருப்பிலும், இந்தியா, ஹொங்கொங் போன்றநாடுகள் 1968-ம் ஆண்டு பெற்ற அதே அளவில் அரிசினை இறக்குமதி செய்து வருகின்றன. குறிப்பிட்ட சில நாடுகளில் இறக்குமதி தேவை பெருமளவு குறைந்திருக்கிறது. இதனால் எதிர்வரும் மாதங்களில் உலக வர்த்தகத்தில் அரிசி இறக்குமதிக்கு பெரும் தேவை ஏற்படுமென கூறமுடியாது.

இந்தியாவைப் பொறுத்தவரை பல ராஜ்யங்களில் மோசமான காலநிலைகாரணமாக நெல் பயிருக்கு பெரும் அழிவுகள் ஏற்பட்டிருப்பினும், இந்தியா அடங்கிலும் நெல்விளைச்சல் 60,000,000 தொன்வரை அதிகரிக்குமென மதிப்பிடப்படுகிறது. ஏனெனில் மற்றைய ராஜ்யங்களில் பிரமாதமான முறையில் நெல் விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக காஷ்மீர் ராஜ்யத்தில் ஒரு வருடத்திற்கு முன்பிருந்ததைவிட 1,500,000 தொன் மேலதிகமாக விளைச்சல் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது. பாகிஸ்தானைப் பொறுத்தவரை 1968-69ல் முந்திய வருடங்களைவிட 5·6 விகிதம் அதிக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது.

# சந்தேகநபரை டயறி காட்டிக் கொடுத்தது

பாணந்துறை, ஞாயிறு

பர்க்கெட் டயறியொன்று சந்தேக நபரைப் பொலிசாரிடம் வகையாகப் பிடித்துக் கொடுத்தது நடாத்தப்பட்ட பல கொள்ளைகள், திருட்டுக்கள் இந்த டயறியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பாணந்துறை ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பகுதியில் நின்றுகொண்டிருந்த நபர் ஒருவரைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். பாணந்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட அவரை அங்கு சோதனையிட்டபோது அவரது டயறி ஒன்றைப் பொலிசார் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொண்டனர்.

அந்தடயறியில் எந்தெந்த இடத்தில் சங்கிலி களவாடியிருக்கிறதாகவும், கொள்ளை நடாந்தியிருக்கிறதாகவும் அவர் எழுதியிருந்தாராம்

இரத்மலானையைச் சேர்ந்த இவர் பாணந்துறை மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு, றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## பொலிஸ் காவல்

மட்டுவில், ஞாயிறு

சாவகச்சேரித் தொகுதியில் இப்பொழுது நடைபெற்றுவரும் தேர்தல் பிரசாரத்தையொட்டி கொடிகாமப் பகுதியில் தினமும் கலவரம் நடைபெற்றுவருவதைத் தொடர்ந்து நேற்று முதல் கொடிகாமப் பகுதிக்கு இரவில் பொலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொடிகாமப் பகுதியில் தேர்தல் பிரசாரம் நடைபெறுவதாகவும் இங்கு, கட்சிகளின் கொடிகள் கூடுதலாகக் கட்டப்படுவதைத் தொடர்ந்து சண்டைகள் உண்டாவதாகவும் சாவகச்சேரி பொலிஸ்நிலைய அதிபருக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது

சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. துரைசிங்கம் நேற்றுமுதல் இரவு வேளைகளில் கொடிகாமப் பகுதிகளுக்கு பலத்த பொலிஸ் பந்தோபஸ்து ஏற்படுத்தியுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 12-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org